




# உள்ளாட்சி டுடே

தமிழ் வார இதழ்

# ULLATCHI TODAY

WEEKLY

R.N.I. No. TN/TAM/2013/52170

வெளியீட்டாளர் & ஆசிரியர் : R. ரவி








மலர் - 13 Volume - 13 • இதழ் - 2 Issue - 2 • 24 ஜூன் 2025 24 June 2025 • விலை : ரூ. 5.00 Rs. : 5.00


## மாற்றுத் திறனாளிகளை உள்ளாட்சி பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்க ஜூலை 1 முதல் விண்ணப்பம்: முதல்வர் ஸ்டாலின்



மாற்றுத் திறனாளிகளை உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்க ஜூலை 1-ம் தேதி முதல் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக விண்ணப்பங்கள் பெறப்படும் என்று, மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்பு குழு சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று நடத்திய பாராட்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில், உள்ளாட்சி பொறுப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி. சமூகநீதி நிலைநாட்டிய முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி பாராட்டும் விழா, சென்னை வள்ளுவர் கோட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று பேசியதாவது: முன்னாள் முதல்வர் கருணாநிதி, திருவள்ளுவர் மீதும், திருக்குறள் மீதும் தீரா காதல் கொண்டவர். திருக்குறளைத் தூக்கிச்சுமந்து பரப்பினார்.

வள்ளுவருக்கு கருணாநிதி சூட்டிய புகழ் மாலையில் மிக முக்கியமானது. 1974-ல் அவர் அடிக்கல் நாட்டிய இந்த வள்ளுவர் கோட்டம். திருவள்ளுவர் சிலையும், திருவாரூர் தேரும் அமைந்துள்ள இந்தக் கோட்டம், கருணாநிதியின் கனவுப் படைப்பு. உங்களுக்கெல்லாம். மாற்றுத் திறனாளிகள் என பெயர் வைத்த தாய் கருணாநிதி. அவர் உருவாக்கிய வள்ளுவர் கோட்டத்தில் இவ்விழா நடைபெறுகிறது. அதனால் இன்று எனக்கு உணர்ச்சிப்பூர்வமான நாள்.

திமுக ஆட்சியில் செய்யப்பட்ட திட்டம் என்பதால், அதிமுக ஆட்சியில் பராமரிப்பின்றி கிடப்பில் போட்டு விட்டார்கள். இந்தக் கலைக் கருவூலத்தைதான் நாம் இப்போது புதுப்பொலிவுடன் ரூ.80 கோடியில் புதுப்பித்திருக்கிறோம். இது 1,400 பேர் அமரக் கூடிய கூட்ட அரங்கத்தோடு அமைந்திருக்கிறது. இந்த தமிழ்க் கோட்டத்தை எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பாராட்டுக்காக நான் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுக்கவில்லை. உங்கள் அன்புக்காகதான் நான் பங்கெடுத் திருக்கிறேன்.

என் மேல் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை. நான் உழைப்பதற்கு ஊக்கமாக எடுத்துக் கொள்கிறேன். அதேபோல கோரிக்கைகளையும் வேண்டுகோளாகவும் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும் - என்றும் நான் உங்களில் ஒருவன். உங்களுக்கான அனைத்தையும் நிச்சயம் படிப்படியாக நிறைவேற்றியே தீருவேன். இது ஏதோ அரசியலுக்காக, தேர்தலுக்காக செய்வது இல்லை. உள்ளார்ந்த அன்புடன் செய்வது.

1984-ம் ஆண்டு முதல் 42 ஆண்டுகளாக எனது பிறந்த நாளை, மாற்றுத்திறனாளி குழந்தைகள் பயிலும் சிறுமலர் பள்ளியில் கொண்டாடுகிறேன். அந்த குழந்தைகளுடன் இருந்து. அவர்களின் புன்னகையை வாழ்த்தாக பெறும் போது தான். அந்த நாளே எனக்கு முழுமை அடையும். சிறுமலரில் தான் என்னுடைய மகிழ்ச்சி முழுமை அடைகிறது.

உங்களுக்கான கோரிக்கையை நீங்களே ஒலிக்க வேண்டும் என்று உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு மாற்றுத் திறனாளி உறுப்பினர் இடம் பெறுவார் என்று மாபெரும் சமூகநீதி உரிமையை சட்டமாக்கியிருக்கிறோம். இதன் மூலம், 13 ஆயிரத்து 357 மாற்றுத் திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுவார்கள். தற்போது உடனடியாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 650 மாற்றுத் திறனாளிகளும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 2 ஆயிரத்து 984 மாற்றுத்திறனாளிகளும் நியமிக்கப் படுவார்கள்.

மாவட்ட வாரியாக. ஜூலை 1 முதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்படும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவில். மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகள் குழுவில் இருக்கும் உறுப்பினர் ஒருவர் இடம் பெற்றிருப்பார். அவர்கள் மன்ற கூட்டங்களில் பங்கேற்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருக்கு வழங்கப்படுவது போல மதிப்பூதியம் வழங்கப்படும். உறுப்பினர்களுக்கு உள்ள கடமைகள் மற்றும் அதிகாரங்களை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. உங்களுக்கு நான் இருக்கிறேன்; இந்த அரசு இருக்கும் என்கின்ற நம்பிக்கையுடன் செயல்படுங்கள். உங்களுக்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவது என்னுடைய கடமை என்று முதல்வர் பேசினார்.

இவ்விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர்கள் டி.ஆர்.பாலு, ஆராசா, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், கே.என்.நேரு, பி.கே. சேகர்பாபு, கீதா ஜீவன், தென் சென்னை மாவட்ட மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், டிசம்பர் 3 இயக்கத்தின் நிறுவனர் தீபக் நாதன், பொதுச் செயலாளர் அண்ணாமலை, தேசிய மாற்றுத்திறனாளிகள் இணையத்தலைவர் அருமான அலி, தேசிய பார்வையற்றோர் இணையத் தலைவர் மனோகரன், உதவிக்கரம் மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் கோபிநாத், மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சிம்மச்சந்திரன், அனைத்து வகை யான மாற்றுத்திறனாளிகள் பாது காப்பு சங்கத்தை சேர்ந்த ஜான்சி ராணி. மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கத் தலைவர் தங்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## யோகா பயிற்சியால் உடல்நலம் மட்டுமின்றி மனநலனும் பாதுகாக்கப்படும்: ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவுரை



யோகா பயிற்சியால் உடல் நலம் மட்டுமின்றி, மனநலனும் பாதுகாக்கப்படும் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

சர்வதேச யோகா தினத்தையொட்டி மதுரை வேலம்மாள் சர்வதேச பள்ளி மைதானத்தில் நேற்று 11-வது ஆண்டு மெகா யோகா சாதனை நிகழ்வு நேற்று நடைபெற்றது. ஆளுநர் ஆர்.என். ரவி தொடங்கிவைத்தார். வேலம்மாள் கல்வி குழுமத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் தலைமை வகித்தார். இதில், ஆளுநர் யோகா பயிற்சியில் பங்கேற்றதுடன், 47 வகையான யோகாசனங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, மாணவர்களுக்கு செய்து காட்டினார். தொடர்ந்து, மாணவர்களுடன் உடற்பயிற்சி, தண்டால் பயிற்சியில் ஈடுபட்டார். அப்போது, தொடர்ச்சியாக 51 தண்டால்களை எடுத்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார்.

பின்னர் ஆளுநர் பேசும்போது, 'யோகசனங்களை தொடர்ந்து செய்வதால் உடலுக்கும், மனதுக்கும் புத்துணர்வு ஏற்படும். யோகாவால் உடல் நலம் மட்டுமின்றி, மனநலனும் பாதுகாக்கப்படும். தற்போது உலகம் முழுவதும் யோகா பயிற்சி செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து?ள்ளது. இதன்மூலம் மதம், எல்லைகளைக் கடந்து பலன்களை மக்கள் அனுபவிக்கின்றனர்' என்றார்.

யோகா பயிற்சி நிகழ்ச்சியில் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

வேலம்மாள் கல்விக் குழுமத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் பேசும்போது, 'நான் சில ஆண்டுக்கு முன்பு முதுகு வலியால் பாதிக்கப்பட்டேன். அப்போது சில யோகாசனங்கள் செய்தேன். முதுகு வலி சரியானது. அதன் மூலம் உடற்பயிற்சியின் அவசியத்தை புரிந்துகொண்டேன். உடல், மனம் வளம்பெற யோகாவைப் பின்பற்றுவோம்' என்றார்.

## பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்தாமல் அரசு ஊழியர்களை ஏமாற்றுவதா? - அன்புமணி கண்டனம்



பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதில் அரசு ஊழியர்களை திமுக அரசு மீண்டும், மீண்டும் ஏமாற்றுவது கண்டிக்கத் தக்கது, என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக அரசுத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து அரசுக்கு பரிந்துரைப்பதற்காக தமிழக அரசால் அமைக்கப்பட்ட ககன்தீப்சிங் பேடி தலைமையிலான குழுவின் பதவிக்காலத்தில் பாதிக்கும் மேல் முடிவடைந்து விட்ட நிலையில், அதன் பணிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதில் அரசு ஊழியர்களை திமுக அரசு மீண்டும், மீண்டும் ஏமாற்றுவது கண்டிக்கத் தக்கது. தமிழ்நாட்டில் 2003-ம் ஆண்டு மார்ச் மாதத்துடன் பழைய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்பட்டு, அதன்பின் பணியில் சேர்ந்தவர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் என்றழைக்கப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்படி ஓய்வு பெற்றவர்களுக்கு உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்படாது என்பதால், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து விட்டு, 2003-ம் ஆண்டுக்கு முன் நடைமுறையில் இருந்த பழைய ஓய்வூதியத் திட்டத்தையே மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று பாமகவும், அரசு ஊழியர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

2021-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று திமுகவின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகளாகியும் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில், அரசின் மோசடிக்கு எதிரான போராட்டம் நடத்துவதற்கு அரசு ஊழியர்கள் தீர்மானித்தனர்.

அவர்களின் கோபத்தை அறிந்த தமிழக அரசு, தமிழ்நாட்டில் எந்த வகையான ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்தலாம் என்பது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை அளிப்பதற்காக ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி தலைமையில் 3 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்படும் என்று கடந்த பிப்ரவரி 4ம் தேதி தமிழக அரசு அறிவித்தது.

இந்தக் குழு அதன் பரிந்துரை அறிக்கையை 9 மாதங்களுக்குள் அரசிடம் தாக்கல் செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், குழு அறிவிக்கப்பட்டு 139 நாள்கள் நிறைவடைந்து விட்ட பிறகும் கூட, இதுவரை அக்குழு எந்தப் பணியையும் செய்ததாக தெரியவில்லை. ககன்தீப்சிங் பேடி தலைமையிலான குழுவின் பணி வரம்புகள் அறிவிக்கப்பட்டு விட்டதாக நிதித்துறை அமைச்சர் அறிவித்திருந்தார். எனினும், பணி வரம்புகள் இன்று வரை மக்களின் பார்வைக்கு வைக்கப் படவில்லை.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமா? அல்லது வேறு வகையான திட்டம் செயல் படுத்தப்பட வேண்டுமா? என்பதை சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்களுடன் விவாதித்து தான் முடிவெடுக்க முடியும். ஆனால், அதற்கான கலந்தாய்வுக் கூட்டங்கள் எதுவும் இதுவரை நடத்தப்படவில்லை. குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் மூன்று அதிகாரிகளும் இதுவரை ஒன்று கூடி தங்களுக்கான திட்டத்தின் நோக்கம் குறித்து விவாதித்தார்களா? என்பது கூட தெரியவில்லை.பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து பரிந்துரைப்பதற்காக குழு அமைப்பதே காலம் கடத்தும் செயல்தான் என்பதை கடந்த பிப்ரவரி மாதமே கூறியிருந்தேன்.

பத்தாண்டுகளுக்கு முன்பே, பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் கடந்த 2015-16 ஆம் ஆண்டுகளில் தீவிரமடைந்த நிலையில், 2016ம் ஆண்டு மார்ச் மாதம் தேர்தல் தேதி அறிவிக்கப்பட இருந்ததைக் கருத்தில் கொண்டு, தமிழ் நாட்டில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து பரிந்துரைக்க 2016ம் ஆண்டு பிப்ரவரியில் ஐஏஎஸ் அதிகாரி சாந்தா ஷீலா நாயர் தலைமையில் குழு ஒன்றை அப்போதைய முதல்வர் ஜெயலலிதா அமைத்தார்.

அக்குழு எந்த பணியையும் செய்யாத நிலையில், 2017ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம் தேதி மூத்த ஐஏஎஸ் அதிகாரி டி.எஸ்.ஸ்ரீதர் தலைமையில் இன்னொரு குழுவை அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அமைத்தார். அந்தக் குழு அதன் அறிக்கையை 27-.11.2018 அன்று தாக்கல் செய்து விட்ட நிலையில், திமுக அரசுக்கு மனம் இருந்தால் அதன் அறிக்கையையே செயல்படுத்தியிருக்கலாம். அதை விடுத்து புதிய குழுவை அமைத்ததே தவறு எனும் போது, அந்தக் குழுவும் பணி செய்யாமல் காலம் தாழ்த்துவது அப்பட்டமான ஏமாற்று வேலை.

தமிழக அரசுத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களில் 6 லட்சத்து 24,140 பேர் புதிய ஓய்வூதியத் திட்டத்தில் தான் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் வாழ்வாதாரம் இன்றி தான் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அதேநிலை மீதமுள்ள 6.24 லட்சம் பேருக்கும் வந்து விடக் கூடாது என்பதற்காகத் தான் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று பாமக வலியுறுத்தி வருகிறது. இந்தியாவில் ராஜஸ்தான், மேற்கு வங்கம், ஜார்கண்ட், சத்தீஷ்கார், பஞ்சாப், கர்நாடகம், இமாச்சலப் பிரதேசம் ஆகிய 7 மாநிலங்களில் பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசு ஊழியர்கள் கடந்த 20 ஆண்டுகளாக ஏமாற்றப் பட்டு வருகின்றனர். அவர்களை இனியும் ஏமாற்றிக் கொண்டிருக்கக் கூடாது.

ஆனால், தொடர்ந்து ஏமாற்றி வரும் திமுகவை வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் அரசு ஊழியர்களும், மக்களும் ஏமாற்றுவது உறுதி. இவ்வாறு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## பேருந்துகளில் மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பயண டோக்கன் விநியோகம்



மூத்த குடிமக்களுக்கு 6 மாதங்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் வழங்குதல் மற்றும் அடையாள அட்டை புதுப்பித்தல், புதிய பயனாளிகளுக்கு வழங்குதல் ஆகிய பணிகள் இன்று (ஜூன் 21) முதல் ஜூலை 31-ம் தேதி வரை நடைபெறுகிறது. அடையாறு, வியாசர் பாடி, ஆலந்தூர், அயனாவரம் உள்ளிட்ட 40 பணிமனை பேருந்து நிலையங்களில் காலை 8 முதல் இரவு 7.30 மணி வரை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதன் பின்னர், வழக்கம்போல் அந்தந்த பணிமனை அலுவலகத்தில் வழங்கப்படும். இருப்பிட சான்றாக குடும்ப அட்டை, வயது சான்றாக ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், கல்வி சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று மற்றும் 2 வண்ண புகைப்படம் ஆகியவற்றை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்ற மினி பேருந்து: 1 கோடி பேர் பயனடைந்ததாக தமிழக அரசு பெருமிதம்




புதிய விரிவான மினி பேருந்து திட்டம் மூலம் பேருந்து வசதி கிடைக்காத 90 ஆயிரம் கிராமங்களில் வசிக்கும் 1 கோடி மக்கள் பயனடைந்துள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பேருந்து வசதி கிடைக்காத குக்கிராமப் பகுதி மக்களுக்கும் பேருந்து வசதி கிடைக்கும் வகையில் 1997-ம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதியால் மினி பேருந்து திட்டம் கொண்டுவரப்பட்டது. இதற்கிடையே, கடந்த ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தின்படி, 25 கிமீ தூரத்துக்கு மினி பேருந்து இயக்கப்படும் என்றும், முக்கிய அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள் போன்ற இடங்களுக்குச் சென்று பொதுமக்களை இறக்கிவிட ஏதுவாக மேலும் 1 கிமீ தூரம் வரை மினி பேருந்துகளை இயக்க வழிவகை செய்யப்பட்டது.

இதன்படி, 3,103 வழித்தடங்களில் உள்ள 90 ஆயிரம் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏறத்தாழ 1 கோடி மக்கள் பயன்பெறத்தக்க வகையில் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 16-ம் தேதி தஞ்சாவூரில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இதுவரை, பேருந்துகளை தங்கள் கிராமத்தில் காணாத பொதுமக்கள் கண்டு மகிழ்ந்து பரவசம் அடையும் வகையில் மினி பேருந்துகள் கிராமப்புறங்களில் பயணிக்கத் தொடங்கிவிட்டன. இந்த மினி பேருந்தை மூதாட்டி ஒருவர் தரையில் விழுந்து தலைவணங்கி வரவேற்றார். வேறு சிலர் பேருந்து வந்த வழித்தடத்தில் கற்பூரம் ஏற்றி மகிழ்ந்து வரவேற்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இவர்களைப் போல ஏறத்தாழ 1 கோடி பேர் மினி பேருந்துகளில் பயணம் செய்து அளவில்லாத மகிழ்ச்சி அடைகின்றனர். இத்திட்டம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## புதுச்சேரியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஊழல் ஆட்சியாளர்களை சிறையில் தள்ளுவோம்: நாராயணசாமி

புதுச்சேரியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஊழல் அதிகாரிகளையும், ஆட்சியாளர்களையும் சிறையில் தள்ளுவோம் என முன்னாள் முதல்வர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். மேலும் புதிய கல்விக்கொள்கையை செயல்படுத்தாமல் சிபிஎஸ்இ பாடத்திட்டத்துக்குப் பதிலாக தமிழக பாடத்திட்டத்தையே புதுச்சேரியில் அமல்படுத்துவோம் என்றும் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய நாராயணசாமி, ''ஆங்கிலத்துக்கு எதிரான மத்திய அமைச்சர் அமித் ஷாவின் கருத்து இந்திய மக்கள் முன்னேறக்கூடாது என்பதற்கானது. அமித் ஷா வேண்டுமென்றே மெ?ழியின் பெயரால் கருத்து வேறுபாடுகளை மாநிலங்களில் உருவாக்கும் வகையில் தேவையில்லாமல் பேசியுள்ளார். புதுச்சேரியில் வரும் 2026ல் காங்கிரஸ் தலைமையில் ஆட்சியமைத்தால் ஹிந்தி மொழி கட்டாயம் என்பதை நீக்குவோம்.

புதிய கல்விக் கொள்கையை தமிழகம் போல் செயல்படுத்த மாட்டோம். சிபிஎஸ்இ பாடத்திட்டத்துக்கு பதிலாக தமிழக கல்வித்திட்டத்தை பின்பற்றுவோம். புதுச்சேரி அரசின் ஊழல் சம்பந்தமான ஆதாரங்களை நிறைய தேடி எடுத்து வைத்துள்ளோம். ரேஷன் அரிசியில் மட்டும் மாதம் 2 கோடி ரூபாய் லஞ்சம் ஆட்சியாளர்களுக்கு செல்கிறது. ஊழல் பட்டியலை இறுதி செய்து வைத்துக்கொண்டு குடியரசு தலைவரை வரும் ஆகஸ்ட்டுக்குள் சந்தித்து மனு அளிப்போம்.

நாங்கள் ஆட்சியில் அமர்ந்த பிறகு 2026-ல் ஊழல் செய்யும் அதிகாரிகளை நிச்சயம் சிறையில் தள்ளுவோம். ஊழல் செய்த ஆட்சியாளர்களும் சிறைக்கு செல்வார்கள். ஊழல் அனைத்து துறைகளுக்கும் வர ஆட்சியாளர்களில்



முதல்வர், அமைச்சர்கள்தான் காரணம். ஊழல் தொடர்பாக விசாரணையும் அமைப்போம். பாஜக மதத்தை வைத்து அரசியல் செய்கிறது. அதன் பின்னணிதான் முருகபக்தர் மாநாடு.

எல்லாரும் முருக பக்தர்கள்தான். நானும் முருக பக்தர்தான். முருகனுக்கு விழா நடத்தலாம். முருக பக்தர் மாநாடு என அரசியல் லாபம் தேட பாஜக முயற்சி செய்கிறது. அதன் பின்னணியில் ஆர்எஸ்எஸ் இருக்கிறது. தமிழக மக்கள் பாஜக, ஆர்.எஸ்.எஸ்சின் சூழ்ச்சி வலையில் விழ மாட்டார்கள்'' என்று தெரிவித்தார்.

## ஆங்கிலம் காலனித்துவ நினைவுச்சின்னம் அல்ல; முன்னேற்றத்துக்கான கருவி - அமைச்சர் அன்பில் மகேஸ்

ஒரு காலத்தில் சமஸ்கிருதம் இருந்ததைப் போலவே, இப்போது அவர்கள் ஆங்கிலத்தை மக்களுக்கு எட்டாமல் வைத்திருக்க விரும்புகிறார்கள். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் பயம் ஆங்கிலம் பற்றியது அல்ல, அது சமத்துவம் மற்றும் வளர்ச்சி பற்றியது, என தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ஆங்கிலம் இனி ஒரு காலனித்துவ நினைவுச்சின்னம் அல்ல - அது முன்னேற்றத்திற்கான உலகளாவிய கருவி. சீனா, ஜப்பான், கொரியா, இஸ்ரேல் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் அதை ஒரு காலனித்துவ தொந்தரவாக அல்ல, மாறாக அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகத்தில் முன்னிலை வகிப்பதற்காக கற்பிக்கின்றன. வலுவான தேசிய பெருமையுடன் கூடிய சீனா கூட, ஆங்கிலத்தை வளர்ச்சிக்கு அவசியமானதாகக் கருதுகிறது.

ஆனால் இந்தியாவில், அமித்



ஷாவும் ஆர்.எஸ்.எஸ்ஸூம் ஆங்கிலத்தை உயர்குடியினருடையதாக சித்தரிக்க விரும்புகிறார்கள். ஏனென்றால் அது நமது கலாச்சாரத்திற்கு தீங்கு விளைவிப்பதால் அல்ல, மாறாக அது ஏழைகள், தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களை எழுச்சி பெற அதிகாரம் அளிப்பதால். ஒரு காலத்தில் சமஸ்கிருதம் இருந்ததைப் போலவே, இப்போது அவர்கள் ஆங்கிலத்தை மக்களுக்கு எட்டாமல் வைத்திருக்க விரும்புகிறார்கள்.

இது மொழி பற்றியது அல்ல - இது கட்டுப்பாட்டைப் பற்றியது. திமுகவில், தமிழ் அடையாளத்திற்காகவும், ஆங்கிலம் வாய்ப்பிற்காகவும் என்று நாங்கள் நம்புகிறோம். அதனால்தான் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு மொழிகளும் கிடைக்கின்றன. ஏனென்றால் எதற்கும் மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது, ஒரு ஏணியாக இருக்க வேண்டும். அமித் ஷாவின் பயம் ஆங்கிலம் பற்றியது அல்ல - அது சமத்துவம் மற்றும் வளர்ச்சி பற்றியது'' எனத் தெரிவித்திருக்கிறார்.

சில நாட்களுக்கு முன்பு டெல்லியில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, இந்தியாவின் அடையாளத்துக்கு தாய்மொழிகள் முக்கியமானவை. வெளிநாட்டு மொழிகளை விட அவை முன்னுரிமை பெற வேண்டும். இந்த நாட்டில், ஆங்கிலம் பேசுபவர்கள் விரைவில் வெட்கப்படுவார்கள். அத்தகைய சமூகத்தை உருவாக்குவது வெகு தொலைவில் இல்லை.

காலனித்துவ அடிமைத்தனத்தின் அடையாளமாக உள்ள ஆங்கிலம் உலகம் முழுவதும் வெறுக்கப்படும். அரைகுறையான அந்நிய மொழிகள் மூலம் முழுமையான இந்தியா என்ற கருத்தை கற்பனை செய்து பார்க்க முடியாது எனத் தெரிவித்தது பெரும் சலசலப்பை உருவாக்கியுள்ளது.

## ஆரிய கலாச்சாரத்தை திணிக்க பாஜக முயற்சி: வைகோ குற்றச்சாட்டு

தமிழகத்தில் ஆரிய கலாச்சாரத்தை திணிக்க, மத்தியில் ஆளும் பாஜக முயன்று வருவதாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ குற்றம்சாட்டினார்.

ஈரோட்டில் இன்று நடைபெற உள்ள மதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ நேற்று சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தார். அவரை கோவை மாநகர் மாவட்ட மதிமுக செயலாளர் கணபதி செல்வராஜ் தலைமையில், அவைத் தலைவர் ஆடிட்டர் அர்ஜூன ராஜ் ஆகியோர் வரவேற்றனர்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் வைகோ கூறியதாவது: ஈரோட்டில் இன்று நடைபெறவுள்ள மதிமுகவின் 31-வது பொதுக்குழுவில் எடுக்கப்படும் சிறந்த முடிவுகள் தீர்மானங்களாக



அறிவிக்கப்படும். வரும் தேர்தலில் அதிக தொகுதிகள் கேட்பது குறித்து தீர்மானம் அறிவிக்கப்பட்ட பின்னர் தெரிந்து கொள்வீர்கள். ஆங்கில மொழி குறித்து மத்திய அமைச்சர் அமித்ஷா பேசியுள்ளார். ஆங்கிலம் என்றும் உலக மொழி. ஆங்கிலம் தெரிந்தால் உலகில் பல நாடுகளுக்கும் சென்று வளரலாம். இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிக்க வேண்டும் என்பதிலேயே பாஜக தீவிரமாக இருக்கின்றனர்.

2017-ம் ஆண்டு திமுகவுடன் கரம் கோர்ப்பது என்று எடுத்த தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை. வேறு எந்தக் கட்சியுடன் சேர்வதற்கான அவசியமும் இப்போது இல்லை. கீழடியில் எடுக்கப்பட்ட பொருட்கள் எல்லாம் மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களுக்கு நிகராக இருக்கின்றன. அதேபோல் வரிசையான வீடுகள், கழிவுநீர் கால்வாய்கள் போன்றவற்றுக்கான ஆதாரங்களை ராமகிருஷ்ணா முதலிலேயே வெளியிட்டுள்ளார்.

அதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய மத்திய அரசு வேண்டுமென்று, இன்னும் துல்லியமாக ஆராய வேண்டும் என்று கூறி குழப்பி வருகிறது. இவர்கள் ஆரிய கலாச்சாரத்தை இங்கு திணிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருப்பதால் கீழடி உள்ளிட்ட பகுதிகளில் பல ஆண்டுகளுக்கு முன்பு நாகரீகமாக வாழ்ந்தார்கள் என்ற சான்றுகள் கிடைப்பதை தாங்கிக் கொள்ள முடியவில்லை, என்றார்.

## தமிழகத்தில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் வந்தே தீரும்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் உறுதி

தமிழகத்தில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் வந்தே தீரும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவத்துறை சார்பில் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் யோகா தினம் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று நடந்தது.

இதில் துறை செயலாளர் ப.செந்தில்குமார், இந்திய மருத்துவத் துறை மற்றும் ஓமியோபதி ஆணையர் விஜயலட்சுமி அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகள், நோயாளிகள் என 500-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு யோகா செய்தனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

யோகா மற்றும் இயற்கை மருத்துவம் உடலை தூய்மையாக்குகிறது.

நாள் முழுவதும் சுறுசுறுப்பாக ஆக்குவது மட்டுமல்லாமல் தனி மனிதன் ஆயுளை நீட்டிக்கிறது.

நோய் எதிர்ப்பு சக்திகளை கூடுதல் ஆக்குவதற்கு யோகா பெரிய அளவில் உதவுகிறது.

இந்தியாவில் அதிகபட்சமாக யோகா மருத்துவ கல்லூரிகள் உள்ள மாநிலம் தமிழகம்தான். வரும் 30-ம் தேதி 59 சித்த மருத்துவர்கள் என 171 பேருக்கு பணி ஆனைகளை தமிழக முதல்வர் வழங்கவுள்ளார்.

சித்த பல்கலைக்கழகம் அமைப்பதற்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் இருந்தார்.

பிறகு சட்டப்பேரவையில் அந்த மசோதா திரும்ப பெற்று கொள்ளப்பட்டது.

சித்த மருத்துவ பல்கலைக்கழகத்துக்கான கட்டமைப்புகள் முடிந்து, இதே வளாகத்தில் ரூ.2 கோடி செலவில் அலுவலகம் தயாராக உள்ளது.

சென்னை மாதவரம் பகுதியில் 25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இடத்தையும் தேர்வு செய்து தயாராக உள்ளது.

சித்த பல்கலைக்கழக மசோதா சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றியதற்கு பிறகு சம்பந்தப்பட்டவர்களின் ஒப்புதல்



பெற்று நிச்சயம் தமிழகத்தில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் வந்தே தீரும்.

தமிழகத்தில் கஞ்சா சாகுபடி பூஜ்ஜியம் சதவீதமாக உள்ளது. எங்கேயாவது கஞ்சா சாகுபடி செய்யப்படுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி சொன்னால் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக உள்ளது.

போதை பொருட்களை விற்கும் சமூக விரோதிகளின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படுவதுடன், மிகப்பெரிய தண்டனைக்கு உள்ளாக்கி சிறையில் அடைப்பது தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.


இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மெட்ரோ நிறுவனத்துடன் இணைந்து வேளச்சேரி மேம்பால ரயில் திட்டம் - விரைவில் அறிவிப்பு வெளியீடு

சென்னை கடற்கரை - வேளச்சேரி வரை இடையே நாள்தோறும் 100 மின்சார ரயில் சேவை இயக்கப்படுகிறது. வேளச்சேரியையும், பரங்கிமலையையும் இணைக்கும் பறக்கும் ரயில் திட்டப்பணி கடந்த 2008-ல் தொடங்கப்பட்டன. பல ஆண்டுகளாக கிடப்பில் இருந்த இந்த பணிகள், தற்போது முழு வீச்சில் நடந்து வருகின்றன. இந்த தடத்தில் உள்ள ரயில் நிலையங்களில் பெரிய, பெரிய கட்டிடங்களாக வணிக நோக்கத்தோடு அமைக்கப்பட்டன.

ஆனால், ரயில்வே துறை நிர்ணயிக்கும் வாடகை கட்டணம் அல்லது ஒப்பந்தம் எடுக்க அதிக கட்டணமாக கொடுக்க நிறுவனங்கள், வியாபாரிகள் முன்வரவில்லை. இதனால், வேளச்சேரி மேம்பால வழித் தடம், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துடன் இணைக்க முடிவு செய்யப்பட்டு 3 ஆண்டுகளாக கிடப்பில் உள்ளன.

இது குறித்து ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: வேளச்சேரி மேம்பால ரயில் பாதையை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துடன் இணைக்கும் முடிவை, ரயில்வே துறை ஏற்றுக் கொண்டுள்ளது. வேளச்சேரி மேம்பால ரயில் சேவையை மெட்ரோ ரயில் நிறுவனத்துடன் இணைப்பதற்கான செலவு, நிதி, ரயில்கள் இயக்கம், நிலம், சொத்து மதிப்பு, வருவாய் பங்கீடு உள்ளிட்டவை குறித்து தெற்கு




ரயில்வே அளித்த அறிக்கையை, வாரியம் ஆய்வு செய்து வருகிறது.

இதுதொடர்பாக, தமிழக அரசும், மத்திய அரசுக்கு அண்மையில் வலியுறுத்தி கடிதம் அனுப்பியது. அதன் அடிப்படையில், வேளச்சேரி மேம்பால ரயில் தடம், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துடன் இணைப் பதற்கான அறிவிப்பை மத்திய ரயில்வே முடிவு செய்து அறிவிக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## இஸ்ரேல், ஈரானில் தவிக்கும் தமிழர்களை விரைந்து மீட்க சீமான் வலியுறுத்தல்



இஸ்ரேல் - ஈரான் நாடுகளில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை விரைந்து மீட்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடும் போர் மூண்டுள்ள ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளில் பல்வேறு பணிகளுக்காக சென்றுள்ள தமிழர்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் தவித்து வருவது மிகுந்த வேதனை அளிக்கிறது. ஈரான் நாட்டுக்கு மீன்பிடித் தொழிலுக்குச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த ஏராளமான மீனவர்கள், தாயகம் திரும்ப போதிய பணமின்றி தவித்து வருகின்றனர்.

இத்தனை பெரிய கடற்பரப்பு இருந்தும், தமிழக மீனவர்கள் வாழ வழியின்றி கடல்கடந்து அயல்நாடுகளுக்குச் சென்று மீன்பிடித் தொழில் செய்ய வேண்டிய அவலநிலை நிலவுகிறது. இத்தகைய சூழலில், ஈரான் - இஸ்ரேல் நாடுகளில் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்களைப் பாதுகாப்பாகத் தாயகம் மீட்டுவந்து, அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய அரசின் தூதரகங்கள் மூலம் தமிழர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு விரைவு படுத்துவதுடன், பயணச் செலவை மத்திய, மாநில அரசுகளே முழுமையாக ஏற்க வேண்டும்.

இவ்வாறு சீமான் வலியுறுத்தியுள்ளார்.

## பேரவை தேர்தலை முன்னிட்டு இபிஎஸ் சுற்றுப்பயணம்: ஜூலை மாதம் கோவையில் தொடங்க திட்டம்



தமிழகத்தில் நடைபெற உள்ள 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு வரும் ஜூலை மாதம், கோவையில் சுற்றுப்பயணத்தை தொடங்க அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் ஆயத்த பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன. அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கூட்டத்தை ஏற்கெனவே கூட்டி கட்சி வளர்ச்சிப் பணிகள் மற்றும் 2026 தேர்தலில் ஆட்சியை பிடிப்பது தொடர்பாக விவாதித்து வருகிறார்.

இதற்கிடையில் மீண்டும் மாவட்ட செயாலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கூட்டத்தை வரும் ஜூன் 24, 25 தேதிகளில் கூட்ட உள்ளார். ஒவ்வொரு கூட்டத்திலும், வாக்குச்சாவடி அளவிலான பாக கிளை நிர்வாகிகளை நியமிக்க அறிவுறுத்தி வருகிறார். இளைஞர்களை அதிக அளவில் கட்சியில் சேர்க்கவும் அறிவுறுத்தி வருகிறார். கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் பேசிய பழனிசாமி, இந்த ஆண்டு ஜனவரி மாத இறுதியில் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருப்பதாக அறிவித்திருந்தார்.

தற்போது பாஜகவுடன் கூட்டணி அமைந்துள்ள நிலையில் வரும் ஜூலை மாதத்தில் சுற்றுப் பயணத்தை கோவையில் தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஒவ்வொரு தொகுதி வாரியாகச் சென்று, மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்பது, சாலை மார்க்கமாக சென்று தொண்டர்களையும், பொதுமக்களையும் சந்திப்பது எனவும் கட்சித் தலைமை திட்டமிட்டுள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வரும் என்றும், அடுத்த வாரம் நடைபெறும் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில், சுற்றுப்பயணத்துக்கான ஏற்பாடுகளை செய்யுமாறு மாவட்ட செயலாளர்களுக்கு பழனிசாமி அறிவுறுத்த இருப்பதாக அதிமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தொழிலதிபர், மனைவியை கட்டிப்போட்டு கொள்ளை: 4 பேர் கைது



வாணியம்பாடியில் தொழிலதிபர் மற்றும் அவரது மனைவியை கட்டிப்போட்டு கொள்ளையடிக்க முயன்ற வழக்கில் போலீஸ்காரர், பெண் உள்பட 4 பேரை போலீசார் கைது செய்தனர். திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நீலிக்கொல்லை புதுதெருவை சேர்ந்தவர் இம்தியாஸ் அஹமது (66), தோல் தொழிற்சாலை உரிமையாளர். இவரது மனைவி சபிதாகுல்சும்(55). இவர்கள் வீட்டில் வாணியம்பாடியை சேர்ந்த சக்திவேல்(37) என்பவர் வேலைக்காரராக உள்ளார். கடந்த 2 நாட்களுக்கு முன் இம்தியாஸ் அஹமது வீட்டிற்குள் 4 பேர் கொண்ட கும்பல் புகுந்து இம்தியாஸ் அஹமது, அவரது மனைவி மற்றும் வேலைக்காரர் சக்திவேல் ஆகியோரின் கை, கால்களை கட்டினர். அவர்களது வாயை 'டேப்' பயன்படுத்தி ஒட்டியுள்ளனர். பின்னர் சபீதா குல்சும்மின் கால் கட்டை அவிழ்த்த கும்பல் நகை, பணம் உள்ள பீரோக்களை திறக்கும்படி கூறினர். அப்போது சபீதாகுல்சும் அவர்களிடம் இருந்து சாமர்த்தியமாக தப்பி கதவை மூடிவிட்டு வெளியே ஓடி கூச்சலிட்டார். பின்னர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கொள்ளை கும்பலை பிடிக்க முயன்றார். அதற்குள் கொள்ளையர்கள் பொதுமக்களை தள்ளிவிட்டு தப்பிவிட்டனர்.

இதுகுறித்து வாணியம்பாடி டவுன் போலீசார் வழக்குப்பதிந்து, 2 தனிப்படைகள் அமைத்து கொள்ளை கும்பலை தேடினர். அங்குள்ள சிசிடிவி காட்சிகளில் பதிவான உருவங்களை வைத்தும் விசாரணை நடத்தி வந்தனர். இதில் கொள்ளை கும்பலுக்கும் வீட்டு வேலைக்காரர் சக்திவேலுக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்தது. அவரை பிடித்து தீவிரமாக விசாரித்தனர். இதில், சக்திவேல், அவரது நண்பர் இளவரசன் (49), திருப்பதியை சேர்ந்த சாந்தகுமாரி (34) ஆகிய 3 பேரும் சேர்ந்து கொள்ளையில் ஈடுபட்டதும் இளவரசனும், சாந்தகுமாரியும் திருப்பதியில் பதுங்கியுள்ளதும் தெரியவந்தது. இதையடுத்து போலீசார் திருப்பதிக்கு சென்று அவர்களை பிடித்தனர். பின்னர் மூவரையும் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.முன்னதாக மூவரும் அளித்த வாக்குமூலம் குறித்து போலீஸ் தரப்பில் கூறியதாவது; சக்திவேல் வீட்டு வேலை பார்த்ததுடன் அடிக்கடி பெயின்டர் வேலைக்கும் சென்றுள்ளார்.

அப்போது திருப்பத்தூர் மாவட்டம் அகரம் கொல்லக்கொட்டாய் பகுதியை சேர்ந்த இளவரசனுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. சக்திவேல், தான் தொழிலதிபரின் வீட்டிலும் வேலை செய்வதையும், அவர் மனைவியுடன் தனியாக வசிப்பதையும் தெரிவித்துள்ளார். இதையடுத்து தொழிலதிபரின் வீட்டில் கொள்ளையடித்தால் வசதியாக வாழலாம் என முடிவு செய்து இளவரசனுக்கு பழக்கமான ஆந்திர மாநிலம் திருப்பதியை சேர்ந்த சாந்தகுமாரியுடன் சேர்ந்து கொள்ளை திட்டம் போட்டுள்ளனர். இதன்பிறகு 3 பேரும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் பணியாற்றும் போலீஸ்காரர் அருண்குமார் உதவியை நாடியுள்ளனர். அவர் கொடுத்த யோசனைப்படி 4 பேர் கொண்ட கொள்ளை கும்பலை ஏற்பாடு செய்து தொழிலதிபர் வீட்டில் கொள்ளையடிக்க வந்துள்ளனர். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர். இதற்கு மூளையாக செயல்பட்ட போலீஸ்காரர் அருண்குமாரை திருமலை காவல் துறை உதவியுடன் கைது செய்து வாணியம்பாடிக்கு அழைத்து வந்தனர். தொழிலதிபர் வீட்டில் புகுந்த கொள்ளையர்கள் யார், தற்போது எங்கு பதுங்கியுள்ள னர் என்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆந்திராவில் இருந்து பெங்களூருக்கு காரில் கடத்தல்: 8 செம்மரக்கட்டைகள் பறிமுதல்: தி.மலை வாலிபர் கைது



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி வழியாக காரில் செம்மரம் கடத்தப்படுவதாக எஸ்பி ஸ்ரேயா குப்தாவிற்கு ரகசிய தகவல் வந்தது. அதன்பேரில் நேற்று வாணியம்பாடி நகர இன்ஸ்பெக்டர் ஆனந்தன் தலைமையிலான சப் இன்ஸ்பெக்டர்கள் பார்த்திபன், தம்பிதுரை மற்றும் நகர போலீசார் குழுக்களாக பிரிந்து நகரின் பல்வேறு பகுதிகளில் தீவிர வாகன கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது வாணியம்பாடி நியூடவுன் பைபாஸ் பஸ் நிறுத்தம் அருகில் ஆந்திரா பதிவு எண் கொண்ட கார் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்தது. போலீசார் அருகே சென்று பார்த்தபோது காரில் ஆட்கள் யாரும் இல்லை. இதனால் சந்தேகம் அடைந்த போலீசார் காரை சோதனை செய்தனர். அதில் காருக்குள் செம்மரக் கட்டைகளை பதுக்கி வைத்திருப்பது தெரியவந்தது.

பின்னர் ரூ.7.50 லட்சம் மதிப்பிலான 300 கிலோ எடை கொண்ட 8 செம்மரக்கட்டைகளை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து நியூடவுன் பஸ் நிறுத்தத்தில் சந்தேகத்திற்கிடமாக செல்போனில் பேசியபடி சுற்றிக் திரிந்து கொண்டிருந்த வாலிபரை கண்ட போலீசார், அவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரணை நடத்தினர்.

அதில் திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர் ஆத்துகண்ணூர் பகுதியை சேர்ந்த வெங்கடேசன்(25) என்பது தெரிய வந்தது. உடனடியாக வெங்கடேசனை வாணியம்பாடி நகர காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற போலீசார், அவரிடம் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் ஆந்திராவில் இருந்து செம்மரக் கட்டைகளை பெங்களூருக்கு கடத்திச்சென்றது தெரியவந்தது.

இதையடுத்து வாணியம்பாடி நகர போலீசார் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து வெங்கடேசனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

## சேலத்தில் விளம்பரம் கொடுத்து 2வது திருமணத்திற்கு பெண் தேடிய 65 வயது தந்தை கழுத்தை அறுத்த மகன்



சேலத்தில் 65 வயதில் 2வது திருமணத்திற்கு வரன் தேடிய தந்தையை கொடூரமாக தாக்கி, கழுத்தை அறுத்த மகனை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். சேலம் சூரமங்கலம் நெடுஞ்சாலை நகரை சேர்ந்தவர் செல்வகுமார் (65). வனவராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். மனைவி சண்முகவள்ளி. இவர்களுக்கு தமிழழகன் (23), கிரிவெங்கடேஷ் (17) என்ற இரு மகன்கள் உள்ளனர். தமிழழகன் பி.காம் படித்து விட்டு, கொண்டலாம்பட்டியில் வாகன உதிரி பாகங்கள் விற்கும் கடை நடத்தி வருகிறார். 2வது மகன் கிரிவெங்கடேஷ் தனியார் பள்ளியில் பிளஸ் டூ படித்து வருகிறார். சண்முக வள்ளிக்கு மனநல பாதிப்பு இருந்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அதனைத் தொடர்ந்து செல்வகுமார் இரு மகன்களுடன் ஒரே வீட்டில் குடும்பமாக வசித்து வந்தார். இந்நிலையில் செல்வகுமார் 2வது திருமணம் செய்வதற்காக நாளிதழ்களில் விளம்பரம் கொடுத்துள்ளார். இதையறிந்த மூத்த மகன் தமிழழகன், தந்தையிடம் இது பற்றி வாக்குவாதம் செய்துள்ளார். நேற்று காலையிலும் தந்தைக்கும் மகனுக்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. தகராறு முற்றியதில் செல்வகுமார் முதலில் மகன் தமிழழகனை இரும்பு பைப்புகளை கழற்றும் ரிங்சால் அடித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த தமிழழகன், பைப் ரிங்சை கொண்டு தாக்கியதில், செல்வகுமாரின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மேலும், கத்தியால் தந்தையின் கழுத்தையும் அறுத்துள்ளார். ரத்த வெள்ளத்தில் கிடந்த செல்வகுமாரை அங்கிருந்தவர்கள் மீட்டு சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து சூரமங்கலம் போலீசார் வழக்கு பதிந்து தமிழழகனை கைது செய்தனர். தமிழழகனுக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு, கடன் பிரச்னை இருந்துள்ளது. தந்தை செல்வகுமாரிடம் பணம் கேட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

## ஈரோட்டில் அரசு வேலை வாங்கி தருவதாக 17 பேரிடம் ரூ.60.50 லட்சம் மோசடி; அங்கன்வாடி பெண் பணியாளர் கைது

ஈரோடு ஜீவானந்தம் சாலை புதுமை காலனியை சேர்ந்த ஜெயபிரகாஷ் மனைவி கிருஷ்ணவேணி (47). அங்கன்வாடி பணியாளர். கடந்த 2020ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டு வரை தனக்கு பழக்கமாகும் நபர்களிடம் அரசு வேலை வாங்கி தருவதாக ஆசைவார்த்தை கூறியுள்ளார்.

கிருஷ்ணவேணி கூறியதை உண்மை என நம்பி 17 பேர் ரூ.60 லட்சத்து 50 ஆயிரத்தை அவரிடம் கெ?டுத்துள்ளனர்.

பணத்தை பெற்று கெ?ண்ட கிருஷ்ணவேணி அரசு வேலை விரைவில் கிடைத்துவிடும் என நம்பிக்கை தெரிவித்து வந்துள்ளார்.

ஆனால், அவர் கூறியபடி வேலை வாங்கி தராததால், பணம் கொடுத்தவர்கள் பணத்தை திரும்ப கேட்டுள்ளனர்.

பணத்தை சீக்கிரம் தருவதாக கிருஷ்ணவேணி கூறினாலும், பணத்தை கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்.



இதனால், பணம் செலுத்தியவர்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தனர்.

இதையடுத்து அவர்கள் ஈரோடு அடுத்த அவல்பூந்துறையை சேர்ந்த சுரேஷ் (44) என்பவர் தலைமையில் தனித்தனியாக ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு போலீசில் புகார் அளித்தனர்.

அதன்பேரில், போலீசார் விசாரணை நடத்தி, கிருஷ்ணவேணி மீது மோசடி வழக்குப்பதிந்து நேற்று முன்தினம் கிருஷ்ணவேணியை கைது செய்தனர்.

பின்னர், நீதிமன்ற உத்தரவுப்படி கிருஷ்ணவேணியை கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

## திருப்பூரில் லாரி கவிழ்ந்த விபத்தில் 2 பெண்கள் பலி!



18.06.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடம் நான்கு சாலை சந்திப்பில் கவிழ்ந்த லாரியின் கீழ் சிக்கிய தாய், மகள் உயிரிழந்தனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இருந்து தூத்துக்குடி துறைமுகத்துக்கு துணி பாரம் ஏற்றிக்கொண்டு கன்டெய்னர் லாரி சென்று கொண்டிருந்த போது திருப்பூர் பல்லடம் அருகே நான்கு சாலையில் திரும்பும் போது எதிர்பாராமல் கவிழ்ந்தது. இதில் பல்லடம் மகாலட்சுமி நகரைச் சேர்ந்த மகாராணி, அவரது மகள் கிருத்திகா சம்பவ இடத்திலேயே பலியாகினர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் கிரேன் மூலம் கன்டெய்னரை மீட்டு அதன் கீழே சிக்கியிருந்த இருவரின் உடலை மீட்டு உடற்கூராய்வுக்காக பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையில் லாரி ஓட்டுநர் தப்பியோடினார். விபத்தால் அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து மாற்றுப் பாதையில் வாகனங்கள் திருப்பி விடப்பட்டது. இதுகுறித்து பல்லடம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

- திருப்பூர் மாவட்ட நிருபர் எஸ்.சக்திவேல்


### உள்ளாட்சி டுடே

**வெளியிடுபவர் & ஆசிரியர்**
R. ரவி
**துணை ஆசிரியர்**
M.K. முருகன், B.A., (திருச்சி)
R. பஞ்சவர்ணம் B.Sc., (சென்னை)
**செய்தி ஆசிரியர்**
R.D. குமார்
**துணை ஆசிரியர்**
M.அருள்மொழிதேவன், D.E.E., M.A.
M. பிரியா ராஜ்குமார்
**கௌரவ ஆசிரியர்**
ந.பா. சேதுராமன்
**ஸ்பெஷல் கரஸ்பாண்டன்ட்**
தாவூத் செரிப் (சென்னை)
S.A.S. பாண்டியன், (சென்னை)
**சிறப்பு நிருபர்**
A. ராமகிருஷ்ணன் (ராமேஸ்வரம்)
M. பாலசுப்பிரமணி B.A. (சென்னை)
**தலைமை நிருபர்**
கௌதம் ஜெயராம், B.Com., PGDBM.,
R. மனோஜ், B.E., (சென்னை)
M. காவியா, B.E., (சென்னை)
V. வீரமுத்து, B.B.A.,(சென்னை)
குணசேகரன், (பெரம்பலூர்)
P. பாலு, B.A., (சென்னை)
K.S. திலீப் B.Sc., (பள்ளிப்பட்டு)
பா.ரமேஷ்,
S. காந்திமதி B.Sc., (திருப்பத்தூர்)
S. சுகுமார் (சென்னை)
ஜோ. மைதிலி கோபிநாத் (சென்னை)
G. அருள்ராஜா (தூத்துக்குடி)
R.G. அதிஸ் (காஞ்சிபுரம்)
G. புவனேந்திரன், B.Com., (திருவண்ணாமலை)
E. செல்வவிநாயகம்,, B.Sc., B.Ed., LLB, (காஞ்சிபுரம்)
**நிருபர்கள்**
ஜெய்நுல் ஹசன், இப்ராஹிம்
G. துரை, R.கணேஷ், சுதாகர்,
T. ஆனந்தகுமார் (உடுமலைப்பேட்டை)
R. கோபால்
S. பார்த்திபன் (சென்னை)
முருகன் (ஈரோடு),
C. கிருபானந்தன் (சென்னை) (ஆன்மிகம்)
M. பார்த்திபன்,சீனியர் ஸ்போர்ட்ஸ் ரிப்போர்ட்டர்
C. முருகன், (மணலி, புதுநகர்)
G. பாண்டிகுமார், (ராமேஸ்வரம் தாலுகா நிருபர்)
B. பார்த்தசாரதி, (திருவள்ளூர்)
R. தீபா (திருவள்ளூர்)
முருகன், (நந்தியம்பாக்கம்)
V. முரளிகிருஷ்ணன் (சென்னை)
S. சக்திவேல், (திருப்பூர்)
S. காளிதாஸ், (ராமேஸ்வரம்)
கபடி சுரேஷ்
J. மலர்மன்னன் (திருவொற்றியூர்)
M. சண்முகம் (சென்னை)
**ஸ்பெஷல் தலைமை புகைப்பட கலைஞர்**
V. ரவிசந்திரன் (குடியாத்தம்)
**புகைப்பட கலைஞர்**
A. ராஜா B.Com., (சென்னை)
S. கண்ணன் (கொருக்குப்பேட்டை)
C. லீலாகுமார் B.Com., (சென்னை)
P. செல்வகுமார், (திருச்சி)
**வடிவமைப்பு**
Kala Graphics, Ch. - 600081.
**சிறப்பு சட்ட ஆலோசகர்**
R.சரவண அரவிந்த், B.A., M.L.,
**சட்ட ஆலோசகர்**
K. கோகுல்ராம், M.Com., M.Phil., M.L.,
J. அன்புராஜன், B.Com., B.L.,
P.ராஜா M.Sc., M.L., (வழக்கறிஞர்)
N. வெங்கட்ராமன், M.Com., M.Phil., B.Ed., B.L.,
D. கோபிநாதன் M.A., B.L.,
S. தாமஸ் M.A., L.L.B, (மூத்த வழக்கறிஞர்)
M. குணசீலன் B.Com., M.L.,
S. ஓம்சிவகுமார் B.A., B.L.,
ஐயப்பன் B.Sc., B.L.,
R. மதன்குமார், B.A., LLB.,

## டார்ச்சர் செய்ததால் ஆத்திரம்: உணவில் தூக்க மாத்திரை கலந்து கொழுந்தனை கொன்ற அண்ணி: உறவினர்கள் 5 பேருடன் கைது



திண்டுக்கல் அருகே வாலிபர் கொலை வழக்கில் அண்ணி உள்பட 6 பேரை போலீசார் கைது செய்தனர். திண்டுக்கல் அருகே சென்னமநாயக்கன்பட்டி பகுதியில் கணேசன் என்பவருக்கு சொந்தமான கிணறு உள்ளது. கடந்த ஜூன் 15ல் அந்த கிணற்றில் கை, கால், வாய் துணியால் கட்டப்பட்டு ஒரு ஆண் சடலம் மிதந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தாடிக்கொம்பு போலீசார் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் ஜிஹெச்சிற்கு அனுப்பி வைத்தனர். போலீசார் நடத்திய விசாரணையில் கொலையாகி கிடந்தவர், திண்டுக்கல் பூத்தாம்பட்டியை சேர்ந்த சலூன் கடைக்காரர் ஜோதிமணி (35) என்பது தெரியவந்தது. சந்தேகத்தின்பேரில் பூத்தாம்பட்டி கோமதி (33), கோனூர் நடராஜன் (48), அவரது மனைவி நீலா (45) ஆகியோரை பிடித்து விசாரித்தனர்.

இதுகுறித்து போலீசார் கூறியதாவது: வேடசந்தூர் கிழக்கு மாத்தினிபட்டியை சேர்ந்தவர் முருகன் (48). ராணுவத்தில் பணியாற்றி வருகிறார். மனைவி கோமதி, 3 குழந்தைகளுடன் பூத்தாம்பட்டியில் வசித்து வந்தார். முருகனின் 2வது சகோதரர் ஜோதிமணி (35). இவர் முருகனின் மனைவி கோமதி, குழந்தைகளுக்கு பாதுகாப்பாகவும், உதவியாகவும் இருந்து வந்தார். அப்போது கோமதிக்கு உடல், மனரீதியாக தொல்லை கொடுத்துள்ளார். இதனை கோமதி பெற்றோரான நடராஜன் (55), நீலா (50), தங்கை கணவர் ஸ்டாலின் (30) ஆகியோரிடம் தெரிவித்தார்.

இதையடுத்து, ஸ்டாலின் தனது நண்பர்களான ஆரோக்கியசாமி (28), குட்டி முத்து (20) ஆகியோரை கூட்டு சேர்த்து கொண்டார். இவர்கள் திட்டப்படி கோமதி, ஜூன் 11ம் தேதி இரவு ஜோதிமணிக்கு உளுந்தங்களியில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்தார். ஆனால் ஜோதிமணி தூங்காமல் இருக்கவே மீண்டும் காபியில் 15க்கும் மேற்பட்ட தூக்க மாத்திரைகளை கலந்து கொடுத்தார். இதனால் மயக்க நிலைக்கு சென்ற ஜோதிமணியை, ஒரு டூவீலரில் இடையில் அமர வைத்து ஆரோக்கியசாமி, குட்டி முத்து அழைத்து சென்றனர். சம்பவ இடத்தில் கிணற்றில் கை, கால், வாயை கட்டி வீசி சென்றதும் ஜோதிமணி மூச்சுத்திணறி இறந்துள்ளார். இவ்வாறு கூறினார். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிந்து 2 பெண்கள் உள்பட 6 பேரையும் கைது செய்தனர்.

திண்டுக்கல் பழநி பைபாஸ் சாலையில் ராமையன்பட்டி அருகே பாலத்தின் கீழ் அட்டை பெட்டியில் ஆண் சடலம் கிடப்பதாக நேற்று காலை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. திண்டுக்கல் தாலுகா போலீசார் அங்கு விரைந்து சென்றனர். அப்போது அட்டை பெட்டியில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் ஆண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். விசாரணையில் கொலையானவர் திண்டுக்கல் வஉசி காலனியை சேர்ந்த குபேந்திரன் (58) என்பது தெரியவந்தது. இவர் எதற்காக கொலையானார்? இதில் ஈடுபட்டது யார் என்பது குறித்து, சம்பவ இடத்தை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

## அம்மிக்கல்லை போட்டும், அரிவாளால் வெட்டியும் மனைவி, 2 மகள்கள் கொடூர கொலை: விவசாயி போலீசில் சரண்

அருப்புக்கோட்டை அருகே குடும்பத் தகராறில் மனைவி, 2 மகள்கள் மீது அம்மிக்கல்லை போட்டும், அரிவாளால் வெட்டியும் விவசாயி கொடூரமாக கொன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அருகே திருவிருந்தாள்புரம் கிராமத்தை சேர்ந்தவர் சுந்தரவேல் (45), விவசாயி. இவரது மனைவி, மல்லாங்கிணறு நந்திக்குண்டுவைச் சேர்ந்த பூங்கொடி (35). இவர்களது மகள்கள் ஜெயதுர்கா (10), ஜெயலட்சுமி (7). அப்பகுதியில் உள்ள பள்ளியில் முறையே 5ம் வகுப்பு, 2ம் வகுப்பு படித்து வந்தனர். தம்பதி இடையே அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதனால், ஒரு மாதத்துக்கு முன்பு, கணவருடன் கோபித்துக் கொண்டு, மகள்களை அழைத்துக் கொண்டு நந்திக்குண்டுவில் உள்ள பெற்றோர் வீட்டுக்கு பூங்கொடி சென்றார். கடந்த 10 நாட்களுக்கு முன்பு சுந்தரவேலின் தந்தை மருமகளின் ஊருக்குச் சென்று, அவரை சமாதானம் செய்து அழைத்து வந்தார்.

நேற்று முன்தினம் இரவு தம்பதி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மனைவி மீது கடுங்கோபத்துடன் இருந்த சுந்தரவேல், சரியாக தூங்கவில்லை என கூறப்படுகிறது. நேற்று அதிகாலை 3 மணியளவில் எழுந்த சுந்தரவேல், அருகே தூங்கி கொண்டிருந்த மனைவி மற்றும் 2 குழந்தைகள் மீது அம்மிக்கல்லை தூக்கி போட்டுள்ளார். இதில் வலி தாங்க முடியாமல் மனைவி, குழந்தைகள் அலறியுள்ளனர். மேலும், ஆத்திரம் தீராத சுந்தரவேல், அருகில் கிடந்த அரிவாளை எடுத்து மனைவி, மகள்களை சரமாரியாக வெட்டினார். இதில் ரத்த வெள்ளத்தில் 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். பின் வீட்டிலிருந்து வெளியேறிய சுந்தரவேல், நேற்று காலை அருப்புக்கோட்டை தாலுகா போலீசில் சரணடைந்து, 3 பேரையும் வெட்டி கொலை செய்து விட்டதாக கூறினார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த போலீசார், சம்பவ இடத்துக்கு சென்று ரத்த வெள்ளத்தில் கிடந்த மூவரது உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கொலை நடந்த வீட்டை எஸ்பி கண்ணன் நேரில் பார்வையிட்டு விசாரணை நடத்தினார்.

அருப்புக்கோட்டை தாலுகா போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், வெளிநாட்டில் வேலை பார்த்து வந்த சுந்தரவேல், கடந்த பிப்ரவரியில் சொந்த ஊர் திரும்பி விவசாயம் செய்து வந்துள்ளார். மனைவியிடம், ‘2 மகள்களை பெற்று விட்டாய். ஒரு ஆண் குழந்தை பெற்றுத் தரவில்லையே’ எனக்கூறி அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார். இதனால் பூங்கொடி, கோபித்துக் கொண்டு தனது தந்தை வீட்டிற்கு சென்று விட்டார். கடந்த 9ம் தேதி, அங்கு சென்ற சுந்தரவேல், பூங்கொடியிடம் தகராறு செய்துள்ளார். அப்போது, மீண்டும் குழந்தை பிரச்னையை கூறி தகராறு செய்ததோடு, வேலைக்கு சென்று சம்பாதித்து தராவிட்டால் 3 பேரையும் கொன்று விடுவதாகவும் மிரட்டியதாக தெரிய வந்துள்ளது.

## தண்டவாளத்தில் பெரிய இரும்பை வைத்து ஏற்காடு எக்ஸ்பிரசை கவிழ்க்க சதி: டிரைவர் செயல்பாட்டால் தப்பியது; மர்ம நபர்களுக்கு வலை

சேலம் அருகே ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலை கவிழ்க்க தண்டவாளத்தில் இரும்பு துண்டை குறுக்கே போட்ட மர்மநபர்கள் குறித்து தனிப்படையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர். சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி அருகே காளிகவுண்டம்பாளையம் வழியாக நேற்று முன்தினம் இரவு 9.45மணிக்கு ஈரோட்டில் இருந்து சென்னை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் சென்றது. அப்போது 10 அடி நீள உடைந்த இரும்பு தண்டவாளத்தை, ரயில் செல்லும் தண்டவாளத்தின் குறுக்கே மர்ம நபர்கள் போட்டு விட்டு சென்றுள்ளனர். அந்த இரும்பு துண்டு ரயில் இன்ஜினின் அடிப்பகுதியில் மாட்டிக் கொண்டது. உடனே லோகோ பைலட், ரயிலை நிறுத்திப் பார்த்த போது, இன்ஜினில் தண்டவாள இரும்பு துண்டு சிக்கியிருந்தது தெரிந்தது.

தகவலறிந்து சேலம் ரயில்வே கோட்ட அதிகாரிகளும், ரயில்வே போலீசாரும் ஊழியர்களுடன் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று 2 மணி நேரம் போராடி ரயிலில் சிக்கியிருந்த 10 அடி நீள தண்டவாள துண்டை அகற்றினர்.



அதன் பின்னர், மாற்று இன்ஜின் பொருத்தப்பட்டு ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் அங்கிருந்து தாமதமாக புறப்பட்டு சென்றது. இதுகுறித்து ஈரோடு ரயில்வே போலீசார் வழக்குப்பதிந்து, தனிப்படை அமைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தண்டவாள இரும்பு துண்டை வைத்தது யார் என தாழையூர் ரயில் பாதை அருகே உள்ள வீடுகளில் தனிப்படை போலீசார் சோதனை செய்து வருகின்றனர்.

வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களில் சந்தேகப்படும்படி யாராவது வந்து சென்றார்களா? என்றும் விசாரணை மேற்கொண்டனர். ரயில் பாதை அருகே இரண்டு தண்டவாள துண்டுகள் பயன்பாட்டிற்காக போடப்பட்டிருந்தது. அதில் ஒன்றை மட்டும் தூக்கி ரயில் பாதையில் மர்மநபர்கள் போட்டுள்ளனர். அப்பகுதியில் கும்பலாக அமர்ந்து மது குடித்துவிட்டு போதையில் யாரேனும் இச்சதி செயலில் ஈடுபட்டிருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர். இன்ஜினில் சிக்கி மீட்கப்பட்ட தண்டவாளத்தை ரயில்வே போலீசார் கைப்பற்றி அதில் பதிந்துள்ள கைரேகைகளை வைத்தும் விசாரிக்கின்றனர்.

ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் ஈரோட்டில் இருந்து சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சதீஸ் குமார், கிருஷ்ணன், ராமசாமி, இளந்திரையன், கல்யாணசுந்தரம் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகள் கோவிந்தராஜ், சந்திரசேகர் ஆகியோர் பயணம் செய்திருந்தனர். அவர்களும் நள்ளிரவில் 2 மணி நேரத்திற்கும் மேலாக ரயிலில் தவித்தபடி இருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஆரணி அருகே இளம்பெண்ணிடமிருந்து 5 மாத பெண் குழந்தை காஞ்சிபுரத்துக்கு கடத்தல்: ரூ.6 லட்சம் கேட்டு மிரட்டிய திருநங்கை கைது

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அருகே ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 24 வயது இளம்பெண். இவர் தனியார் கல்லூரியில் எம்எஸ்சி 2ம் ஆண்டு படித்து வருகிறார். இவரது பெற்றோர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்ட நிலையில், போளூர் அடுத்த அந்திமூரை சேர்ந்த காமேஷ் என்பவர் காதலிப்பதாக கூறி பழகினார். இதில் இளம்பெண் கர்ப்பமானதால் காமேஷ் திருமணம் செய்து கொண்டார்.

தற்போது இவர்களுக்கு 5 மாத பெண் குழந்தை உள்ள நிலையில், மனைவி மற்றும் குழந்தையை தவிக்கவிட்டு காமேஷ் திடீரென பிரிந்து சென்றுவிட்டாராம். இதனால் இளம்பெண் தனது குழந்தையை பார்த்துக்கொள்ள யாரும் இல்லாததால், கல்லூரி படிப்பை தொடர முடியாமல் சிரமப்பட்டு வந்தார். மேலும், இளம்பெண்ணுக்கு கல்லூரியில் தேர்வு தொடங்கியதால், அவர் குழந்தையை பார்த்துக்கொள்ள ஆள் வேண்டும் என தோழிகளிடம் தெரிவித்தார்.



இந்நிலையில் இளம்பெண் வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்லும் ஆரணி அடுத்த இரும்பேடு பகுதியில் உள்ள திருநங்கை மது (எ) சரத் என்பவர், குழந்தையை பார்த்துக்கொள்வதாக கூறினார். இதனால் கடந்த 10ம் தேதி முதல் அவரிடம் குழந்தையை பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு இளம்பெண் கல்லூரிக்கு செல்ல தொடங்கினார். இதனிடையே கடந்த 13ம் தேதி தாய்க்கு உடல் நிலை சரியில்லை எனக்கூறிய திருங்கை சரத், அவரை பார்த்துவிட்டு வருவதாகவும், குழந்தையை அழைத்துச்செல்வதாகவும் கூறியுள்ளார்.

தொடர்ந்து அந்த குழந்தையை காஞ்சிபுரம் மாவட்டம் நெற்குணம் கிராமத்தில் உள்ள தாய் வீட்டிற்கு சரத் காரில் கடத்திச் சென்றார். அதன்பின்னர், இளம்பெண்ணிடம் குழந்தையை ஒப்படைக்காமல் சரத் தட்டிக்கழித்து வந்தார். அவரிடம் குழந்தையை ஒப்படைக்கும்படி இளம்பெண் கேட்டு வந்தார்.

இதேபோல் நேற்றுமுன் தினமும் கேட்டுள்ளார். அதற்கு சரத், உன் குழந்தையை ஒப்படைக்க வேண்டும் என்றால், எனக்கு ரூ.6 லட்சம் கொடு’ என கேட்டு மிரட்டியதாக தெரிகிறது. இதனால் அதிர்ச்சியடைந்த இளம்பெண், ஆரணி தாலுகா போலீசில் நேற்று புகார் அளித்தார். அதன்பேரில், தாலுகா போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில், இளம்பெண்ணின் குழந்தையை திருநங்கை சரத் கடத்தி வைத்துக் கொண்டு பணம் கேட்டு மிரட்டி வந்தது தெரியவந்தது. இதையடுத்து, தாலுகா போலீசார் நெற்குணத்திற்கு சென்று, சரத்திடமிருந்த குழந்தையை மீட்டு இளம்பெண்ணிடம் ஒப்படைத்தனர். மேலும் திருநங்கை சரத்தை கைது செய்து ஆரணி குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

## இளம்பெண்ணை நடிக்க வைத்து உல்லாச வீடியோ எடுத்து பணம் பறித்த 3 பேர் கைது

அவிநாசி அருகே பெருமாநல்லூரில் இளம்பெண், வாலிபருடன் உல்லாசமாக இருப்பது போல் நடித்தார்.

இதை வீடியோ எடுத்து மிரட்டி வாலிபரிடம் 2 பேர் நகை, பணம் பறித்தனர்.

இவ் வழக்கில் இளம்பெண் உள்ளிட்ட 3 பேரை போலீசார் கைது செய்தனர். திருப்பூர் மாவட்டம், அவிநாசி அருகே பெருமாநல்லூரை சேர்ந்தவர் கிருத்திகா (19) (பெயர் மாற்றப்பட்டுள்ளது). ஈரோடு மாவட்டம், அரச்சலூர் குமாரபாளையத்தைச் சேர்ந்தவர் ஜெகதீசன் (27). இருவருக்கும் பஸ் பயணத்தில் பழக்கம் ஏற்பட்டு போனில் அடிக்கடி பேசி வந்தனர்.

இந்நிலையில் கிருத்திகா, இருவரும் உல்லாசமாக இருக்கலாம் என்று கூறி ஜெகதீசனை நேரில் வரச்சொல்லி உள்ளார்.

இதையடுத்து ஜெகதீசன் பெருமாநல்லூர் அருகே உள்ள தட்டாங்கோட்டை சொட்டமேடு என்ற பகுதிக்கு வந்தார். அங்கு காத்திருந்த கிருத்திகா, ஜெகதீசனை ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

பிறகு இருவரும் நெருக்கமாக இருந்தனர்.

அப்போது 2 பேர் திடீரென வீட்டில் நுழைந்து இருவரும் உல்லாசமாக இருந்ததை போட்டோ மற்றும் வீடியோ எடுத்ததாகவும், அதை சமூக வலைதளத்தில் வெளியிட்டு உறவினர்களிடம் கூறுவோம், இதை செய்யாமல் இருக்க பணம் தரவேண்டும் என மிரட்டினர்.

இதனால் அதிர்ச்சியடைந்த ஜெகதீசன் கழுத்தில் அணிந்திருந்த இரண்டு பவுன் தங்க செயினையும், கையில் வைத்திருந்த பணத்தையும் அவர்களிடம் கொடுத்தார்.

உடனடியாக இருவரும் கிருத்திகாவை அழைத்துக்கொண்டு அங்கிருந்து வேகமாக தப்பி சென்றனர்.

இதுகுறித்து பெருமாநல்லூர் போலீசில் ஜெகதீசன் புகார் அளித்தார்.



போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்தனர்.

இதில் தர்மபுரியை சேர்ந்த அருண் (33), ஈரோட்டை சேர்ந்த பழனிச்சாமி(51) ஆகிய இருவரும், பட்டதாரி இளம் பெண்ணான கிருத்திகாவை ஜெகதீசனுடன் தனிமையில் இருக்குமாறு நடிக்க வைத்து அதை வீடியோ எடுத்து மிரட்டி பணம் பறித்தது தெரிய வந்தது.

இதையடுத்து பழனிச்சாமி, அருண், கிருத்திகா ஆகிய மூவரையும் போலீசார் நேற்று இரவு கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## திருமண மண்டப மேலாளர் நடுரோட்டில் குத்திக்கொலை: போதை வாலிபர் வெறிச்செயல்

போதையில் நடுரோட்டில் நின்று தகராறு செய்ததை கண்டித்த திருமண மண்டப மேலாளரை வாலிபர் கத்தியால் சரமாரி குத்தி கொலை செய்தார். திருச்சி மாவட்டம் முசிறி திருமுருகன் நகரை சேர்ந்தவர் சுப்பிரமணியன் (52). அப்பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் மேலாளராக வேலை செய்து வந்தார். அதே பகுதியை சேர்ந்தவர் கணேசன்(35). கூலித் தொழிலாளி. குடிப்பழக்கம் உடையவர். இவர் அடிக்கடி குடித்துவிட்டு சாலையில் நின்று ரகளை செய்வது வழக்கம்.

நேற்று மாலை வழக்கம்போல் கணேசன் குடி போதையில் சுப்பிரமணியன் வேலை பார்க்கும் திருமண மண்டபம் அருகில் சாலையில் நின்று வருவோர், போவோரிடம் தகராறு செய்து கொண்டிருந்தார். இதனால் சுப்பிரமணியன் அவரை கண்டித்தார். மேலும் இதுகுறித்து முசிறி போலீசிலும் புகார் அளித்து விட்டு மண்டபத்துக்கு சென்று விட்டார். இதையடுத்து போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து கணேசனை கண்டித்ததுடன் எச்சரித்து சென்றனர். இதனால் கணேசன், சுப்பிரமணியன் மீது கோபத்தில் இருந்தார்.

இந்நிலையில் சுப்பிரமணியன் நேற்றிரவு 10.30 மணியளவில் வேலை முடிந்து மண்டபத்திலிருந்து வீட்டுக்கு நண்பருடன் டூவீலரில் பின்னால் அமர்ந்து புறப்பட்டார். திருமுருகன் நகர் பஸ் நிறுத்தம் அருகே வந்தபோது அங்கு நின்ற கணேசன், டூவீலரை மறித்து தகராறு செய்தார். பின்னர் டூவீலரில் இருந்து இறங்கி வந்த சுப்பிரமணியனை மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரது மார்பு, முதுகில் சரமாரி குத்தி விட்டு ஓடி விட்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த அப்பகுதியினர் முசிறி போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். அங்கு வந்த போலீசார் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிய சுப்பிரமணியனை முசிறி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு முதலுதவி சிகிச்சைக்கு பின்னர் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை 4 மணிக்கு சுப்பிரமணியன் இறந்தார். தகராறில் கணேசனுக்கும், கையில் கத்தி கீறியதில் லேசான காயம் ஏற்பட்டது. இதனால் அவர் முசிறியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிகிச்சை முடிந்ததும் கணேசனை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில அடைக்க உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.



# போலி பாஸ்போர்ட்டில் சென்னை வந்த இலங்கையை சேர்ந்த தாய், மகள் கைது

கொழும்பில் இருந்து, இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் நேற்று முன்தினம் இரவு, சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தது. அந்த விமானத்தில் சென்னை அரும்பாக்கம் முகவரியில் வசிக்கும் 48 வயது பெண், மற்றும் 21 வயது இளம்பெண் ஆகியோர், இந்திய பாஸ்போர்ட்களில் இலங்கைக்கு சுற்றுலா பயணிகளாக சென்று விட்டு, திரும்பி வந்தனர்.

குடியுரிமை அதிகாரிகளுக்கு அந்த பெண்கள் இருவர் மீதும் சந்தேகம் ஏற்பட்டது.

இருவரும் இலங்கையைச் சேர்ந்த தாய், மகள் என்று தெரியவந்தது.

இவர்கள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து சென்னையில் குடியேறி உள்ளனர்.

அதன் பின்பு அவர்கள் போலி ஆவணங்கள் மூலம், இந்திய பாஸ்போர்ட்டுகள் வாங்கியதாக தெரிகிறது.

இதையடுத்து சென்னை விமான நிலைய குடியுரிமை அதிகாரிகள், இலங்கை பெண்கள் இருவரும் போலி ஆவணங்களை கொடுத்து ஏஜென்ட்கள் மூலம் போலி பாஸ்போர்ட்டுகள் பெற்று, அதை பயன்படுத்தியதாக இருவரையும் கைது செய்தனர்.

அதோடு இவர்களுக்கு போலி பாஸ்போர்ட்டுகளை வாங்கிக் கொடுத்த ஏஜென்ட்டுகள் யார், அதற்காக ஏஜென்ட்டுகள் எவ்வளவு பணம் பெற்றனர் என்பது குறித்தும், இரவு முழுவதும் இரு பெண்களிடமும் அதிகாரிகள்



விசாரணை நடத்தினர்.

அதோடு போலி பாஸ்போர்ட்டுகளில் கைதான, இலங்கையைச் சேர்ந்த தாய், மகள் இருவரையும், மேல் நடவடிக்கைக்காக சென்னையில் உள்ள மத்திய குற்றப்பிரிவு போலீசில் ஒப்படைக்க குடியுரிமை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையத்தில், போலி பாஸ்போர்ட்டுகளில் இலங்கையில் இருந்து, விமானத்தில் சென்னைக்கு வந்த, தாய் மகள் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## 2 காவலரை வெட்டி தப்ப முயற்சி: 80 வயது மூதாட்டியை பலாத்காரம் செய்த வாலிபரை சுட்டுப்பிடித்த போலீசார்: எஸ்.பி. நேரில் விசாரணை

மூதாட்டியை தாக்கி பலாத்காரம் செய்த வாலிபர், 2 காவலரை கத்தியால் வெட்டிவிட்டு தப்ப முயன்றபோது போலீசார் துப்பாக்கியால் சுட்டுப்பிடித்தனர். கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 80 வயது மூதாட்டி. இவர் நேற்று முன்தினம் மாலை இயற்கை உபாதை கழிக்க அதே பகுதியில் உன்ன சவுக்கு தோப்புக்கு சென்றார். அப்போது அங்கு போதையில் வந்த ஒருவர் திடீரென மூதாட்டியை தாக்கிவிட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. மேலும் மூதாட்டி அணிந்திருந்த நகையையும் பறித்துக்கொண்டு தப்பி சென்று விட்டார்.

இதுகுறித்து தகவலறிந்த பண்ருட்டி போலீசார் மூதாட்டியை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதை தொடர்ந்து எஸ்.பி. ஜெயக்குமார் நேற்று முன்தினம் இரவு சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினார். பின்னர் தனிப்படை அமைத்து குற்றவாளியை தேடும் பணியை முடுக்கிவிட்டார். இந்நிலையில் கும்பகோணம் சாலையில் உள்ள முந்திரி தோப்பில் குற்றவாளி





பதுங்கியிருப்பதாக பண்ருட்டி காவல் நிலையத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் நேற்று பண்ருட்டி இன்ஸ்பெக்டர் வேலுமணி தலைமையில் 10க்கும் மேற்பட்ட போலீசார் அங்கு சென்று தேடும் பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கியிருந்தவரை ஏட்டுக்கள் குபேந்திரன், அரிகரன் ஆகியோர் பிடிக்க முயன்றனர். அப்போது அவர் திடீரென 2 போலீசாரையும் சரமாரியாக கத்தியால் வெட்டிவிட்டு தப்பி ஓடினார். உடனே இன்ஸ்பெக்டர் வேலுமணி துப்பாக்கியால் அவரது இடது காலில் சுட்டார். இதில் குண்டு பாய்ந்து அவர் கீழே விழுந்தார்.

பின்னர் அவரை பிடித்து விசாரித்தபோது எஸ்.கே.பாளையத்தை சேர்ந்த பழைய குற்றவாளி சுந்தரவேல் (24) என்பது தெரிய வந்தது. உடனே போலீசார் அவரை பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இதுகுறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவ இடத்திற்கு வந்த எஸ்பி ஜெயக்குமார் காயமடைந்த 2 போலீசாரையும் சந்தித்து ஆறுதல் கூறினார். 2 காவலரை கத்தியால் வெட்டிவிட்டு தப்ப முயன்ற பாலியல் குற்றவாளியை போலீசார் துப்பாக்கியால் சுட்டுபிடித்த சம்பவம் பண்ருட்டியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மிரட்டி பணம் பறித்தல் உள்ளிட்ட பல வழக்குகளில் கைதான மிளகாய்பொடி வெங்கடேஷ் மீது குண்டர் தடுப்பு சட்டம் பாய்ந்தது: 2 நாள் போலீஸ் காவலில் விசாரணை

மிரட்டி பணம் பறித்தல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட வெங்கடேஷ் என்ற மிளகாய் பொடி வெங்கடேஷை குண்டர் தடுப்பு சட்டத்தில் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர், பி.டி.மூர்த்தி நகரை சேர்ந்தவர் மிளகாய்ப்பொடி வெங்கடேஷ் என்ற கே.ஆர். வெங்கடேஷ். இவர், பாஜ ஓபிசி அணியின் மாநில செயலாளராக பதவி வகித்து வந்தார்.

ஆவடி காவல் ஆணையகரத்திற்குட்பட்ட, செங்குன்றம் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளியான கே.ஆர்.வெங்கடேஷ் மீது, ஆவடி காவல் ஆணையகரத்தில் 5 வழக்குகளும், ஆந்திர மாநிலத்தில் 49 வழக்குகளும் உள்ளன.

கடந்த 8ம் தேதி மதுரை வந்த உள்துறை அமைச்சர் அமித் ஷாவை, பிரபல ரவுடி மிளகாய் பொடி வெங்கடேஷ் சந்தித்து பேசிய சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பேசு பொருளாக மாறியது.

மேலும், அமித்ஷாவுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை சமூக வலைதளத்தில் பதிவிட்ட அவர் காவல் அதிகாரிகளை மிரட்டும் வகையில் பல அதிகாரிகளை அதில் டேக் செய்திருந்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், சமீபத்தில் எலட்ரிக்கல்ஸ் கடைக்கு வாங்கிய பொருட்களுக்கு பணம் கொடுக்கல் வாங்கலில் கட்டப்பஞ்சாயத்து செய்ததாக அளிக்கப்பட்ட புகாரில், செங்குன்றம் போலீசாரால் கடந்த 13ம் தேதி இவர் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதை தொடர்ந்து மிளகாய்ப் பொடி வெங்கடேஷை, கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்பில் இருந்தும் பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நீக்கி உத்தரவிட்டிருந்தார்.

புலன் விசாரணையின் தொடர்ச்சியாக மேற்படி சம்பவத்தில் தொடர்புடைய மிளகாய்ப் பொடி வெங்கடேஷ் மீது தொடர்ந்து, மிரட்டி பணம் பறித்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் வந்த நிலையில் கடந்த 17ம் தேதி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், மிளகாய்ப்



பொடி வெங்கடேஷிடம் வழக்கு தொடர்பாக, மேலும் விசாரணை நடத்த வேண்டும் என்பதால் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டி செங்குன்றம் காவல் துறையினர், பொன்னேரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

அதில், 2 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இதனையடுத்து, புழல் சிறையில் அடைக்கப்பட்ட மிளகாய்ப் பொடி வெங்கடேஷை செங்குன்றம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து, காவல்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை, கோவில்பட்டி உள்பட பல்வேறு ஊர்களில் கைவரிசை; கொள்ளையர் 4 பேர் கைது: 16 பவுன் தங்ககட்டி, அரை கிலோ வெள்ளி கட்டி பறிமுதல்

தமிழகத்தில் கோவில்பட்டி உள்பட பல்வேறு ஊர்களில் கைவரிசை காட்டிய 4 கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 16 பவுன் தங்கக் கட்டி மற்றும் அரை கிலோ வெள்ளி கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் கடந்த சில மாதங்களாக வீடு புகுந்து நகை, பணம் கொள்ளையடிக்கப்படும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வந்தன. இதையடுத்து கோவில்பட்டிக்கு வெளியூர்களிலிருந்து வரும் வாகனங்களை அனைத்து ‘செக் போஸ்ட்’களிலும் கண்காணித்து தீவிரமாக சோதனை நடத்தும்படி எஸ்பி ஆல்பர்ட் ஜான் உத்தரவிட்டிருந்தார். அதன்படி கோவில்பட்டி டிஎஸ்பி ஜெகந்நாதன் ஆலோசனையின் பேரில் இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் தலைமையில் எஸ்ஐக்கள் செந்தில்குமார், ராமச்சந்திரன், வேல்பாண்டி மற்றும் போலீசார் கோவில்பட்டி இளையரசனேந்தல், சாத்தூர், பசுவந்தனை ஆகிய ‘செக் போஸ்ட்’ களில் தீவிர வாகன சோதனை நடத்தினர்.

கோவில்பட்டி இளையரசனேந்தல் ‘செக் போஸ்ட்’டில் நேற்று மாலை ராஜபாளையம், திருவேங்கடம் வழியாக கோவில்பட்டிக்குள் நுழையும் வாகனங்களை சோதனை நடத்திய போது, 2 பைக்குகளில் ‘ஹெல்மெட்’ அணிந்தவாறு 4 பேர் வந்தனர். அந்த பைக்குகளை வழிமறித்து போலீசார் சோதனை நடத்திய



போது, பைக்கின் பின் சீட்டில் இருந்த 2 பேர் தப்பியோடினர். அவர்களையும், பைக்கை ஓட்டி வந்த 2 பேரையும் போலீசார் மடக்கிப் பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் காஞ்சிபுரம், அகரம்தேன், எம்ஜிஆர் நகரைச் சேர்ந்த மே?கன் என்ற சகாயராஜ் (48), திருத்தணி, பாலாஜி நகரைச் சேர்ந்த ரமேஷ் பாபு மகன் சதீஷ் (37), விருதுநகர் மாவட்டம், சாத்தூர், காமராஜர் நகர், கணேஷ் தெருவைச் சேர்ந்த முத்துராஜா (43), சென்னை, அம்பத்தூர், பானு நகரைச் சேர்ந்த பொன்முருகன் (53) ஆகிய 4 பேர் என்பது தெரியவந்தது.

இவர்கள் தமிழகத்தில் கோவில்பட்டி உள்பட பல்வேறு முக்கிய நகரங்களில் கைவரிசை காட்டியது தெரியவந்தது. அதாவது பைக்குகளில் ஹெல்மெட் அணிந்தவாறு செல்லும் இவர்கள் பகலில் பூட்டிக் கிடக்கும் வீடுகளை நோட்டம் பார்த்து இரவில் அந்த வீட்டில் கொள்ளையடிப்பதை வழக்கமாக வைத்துள்ளனர். இவ்வாறு கோவில்பட்டி, புதுஅப்பனேரி, சக்கரபாணி நகரைச் சேர்ந்த நல்லசிவன் (67) என்பவது வீட்டில் நகை, பணத்தை கொள்ளையடித்ததை ஒப்புக் கொண்டனர். இவர்கள் சென்னை, காஞ்சிபுரம், திருத்தணி, சாத்தூர், கோவில்பட்டி ஆகிய ஊர்களில் ஹெல்மெட் மற்றும் முகமூடி அணிந்து பல்வேறு வீடுகளை உடைத்து நகை, பணத்தை கொள்ளையடித்துள்ளனர். அவர்களிடமிருந்து 16 பவுன் தங்கக்கட்டி மற்றும் அரை கிலோ வெள்ளி கட்டிகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இவர்கள் 4 பேர் மீது தமிழகம் முழுவதும் 35க்கும் மேற்பட்ட கொள்ளை வழக்குகள் பதிவாகியுள்ளன. இதையடுத்து இவர்கள் 4 பேரும் கைது செய்யப்பட்டு, கோவில்பட்டி ஜுடிசியல் மாஜிஸ்திரேட் கோர்ட் எண்.2ல் ஆஜர் செய்யப்பட்டு, பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். கோவில்பட்டி உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கைவரிசை காட்டிய 4 கொள்ளையர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம், பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தை கலக்கிய கொள்ளையர்கள் 4 பேரை செக் போஸ்ட்களை கண்காணித்து பிடித்த கோவில்பட்டி டிஎஸ்பி ஜெகந்நாதன், இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன், எஸ்ஐக்கள் செந்தில்குமார், ராமச்சந்திரன், வேல்பாண்டி மற்றும் போலீசாரை எஸ்பி ஆல்பர்ட் ஜான் பாராட்டி கவுரவித்தார்.

## பாவூர்சத்திரம் அருகே வீடு புகுந்து இளம்பெண்ணை கழுத்தறுத்து கொன்ற வழக்கில் தலைமறைவானவர் கைது

பாவூர்சத்திரம் அருகே வீடு புகுந்து இளம்பெண்ணை கழுத்தறுத்து கொன்ற வழக்கில் குற்றவாளியை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரம் அருகேயுள்ள பனையடிபட்டி காளியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் பரமசிவன்(45).

பாவூர்சத்திரம்-கடையம் ரோட்டில் சலூன் கடை வைத்துள்ளார்.

இவரது மனைவி உமா(37). இவர்களுக்கு 17, 16 வயதில் இரு மகன்கள் உள்ளனர். கடந்த 1ம்தேதி இரவு பக்கத்து ஊரில் நடந்த கபடி போட்டியை பார்த்துவிட்டு அதிகாலை 3 மணிக்கு வந்துள்ளனர்.

அப்போது வீட்டுக் கதவை உமா திறந்ததும், மகன்கள் மாடியில் உள்ள அறைக்கு தூங்க



சென்றுவிட்டனர். அதிகாலை 5.30 மணி அளவில் பரமசிவன் டீ குடிக்க கடைக்கு சென்றுள்ளார். அப்போது அவரது வீட்டுக்குள் அத்துமீறி புகுந்த மர்மநபர் தூங்கிக் கொண்டிருந்த உமாவை கழுத்தறுத்துக் கொன்றுவிட்டு தப்பியோடி விட்டார்.

இதுகுறித்து பரமசிவன், பாவூர்சத்திரம் போலீசில் புகார் செய்தார்.

ஆலங்குளம் டிஎஸ்பி சகாய ஜோஸ், பாவூர்சத்திரம் இன்ஸ்பெக்டர் ஹரிகரன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர்.

போலீசார் நடத்திய தீவிர விசாரணையில் பக்கத்து வீட்டைச் சேர்ந்த மணிக்குமார்(41) என்பவர் உமாவை கொலை செய்ததும், மணிக்குமாருக்கும் உமாவுக்கும் இடையேயான தகாத உறவு காரணமாக அவர் கெ?லை செய்யப்பட்டது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

இதனையடுத்து மணிக்குமாரை போலீசார் தேடி வந்த நிலையில் பனையடிப்பட்டி ஊருக்கு அருகில் உள்ள கோழி பண்ணையில் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு தகவல் வந்தது. சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் அவரை கைது செய்தனர்.

பின்னர் அவரை தென்காசி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## சாக்கடை கால்வாய் அமைப்பதாக கூறி தெருவில் 10 அடி குழிதோண்டி மருமகளை புதைத்த குடும்பம்: கணவர், மாமனார் உட்பட 4 பேர் கைது





அரியானாவில் சாக்கடை கால்வாய் அமைப்பதாக கூறி மருமகளை கொன்று தெருவில் 10 அடி குழிதோண்டி புதைத்த கணவர், மாமனார், மாமியார் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர். அரியானா மாநிலம் பரிதாபாத்தைச் சேர்ந்த அருண்சிங்(28) என்பவருக்கும், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த தனு (24) என்பவருக்கும் கடந்த 2023ல் திருமணம் நடைபெற்றது. திருமணம் ஆன சில மாதங்களிலேயே, தனுவின் கணவர் மற்றும் மாமியார் குடும்பத்தினர் நகைகள் மற்றும் பணம் கேட்டு வரதட்சணைக் கொடுமை செய்ததாகக் கூறப்படுகிறது. அவர்களின் கொடுமை தாங்காமல், தனு தனது தாய் வீட்டிற்குத் திரும்பி வந்து ஓராண்டுக்கு மேல் தங்கியிருந்தார். பின்னர் மீண்டும் கணவர் வீட்டிற்கு அனுப்பப்பட்ட நிலையில், கொடுமைகள் தொடர்ந்தன.

அவரைத் தொலைபேசியில் கூட குடும்பத்தினருடன் பேச அனுமதிக்கவில்லை. கடந்த ஏப்ரல் 23ம் தேதி, தனு வீட்டை விட்டு ஓடிவிட்டதாக அவரது மாமியார் வீட்டார், தனுவின் குடும்பத்தினரிடம் தெரிவித்துள்ளனர். ஆனால், ஏப்ரல் 9ம் தேதியே தனது சகோதரியுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் சந்தேகம் அடைந்த தனுவின் சகோதரி பிரீத்தி, காவல்துறையில் புகார் அளித்துள்ளார்.

இந்த நிலையில், பரிதாபாத்தில் உள்ள தனுவின் கணவர் வீட்டிற்கு அருகே உள்ள தெருவில், 10 அடி ஆழமுள்ள குழியிலிருந்து அழுகிய நிலையில் அவரது உடல் மீட்கப்பட்டது. சமீபத்தில் கான்கிரீட் போட்டு மூடப்பட்டிருந்த அந்த இடத்திலிருந்து, ஜேசிபி இயந்திரம் மூலம் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. இந்தக் கொலை தொடர்பாக தனுவின் கணவர் அருண் சிங், மாமனார் பூப் சிங் (50), மாமியார் மற்றும் மற்றொரு உறவினர் என நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். மீட்கப்பட்ட உடல், மரணத்திற்கான நேரம் மற்றும் காரணத்தைக் கண்டறிய தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## மகன் திருமணத்தில் மதிக்காததால் மனைவியை குத்திக் கொன்ற கணவர் கைது

கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு அருகே பெரிய நெல்லிக்கொல்லை ஆசாரி தெருவை சேர்ந்தவர் அண்ணாதுரை(55), தச்சு தொழிலாளி. இவருக்கு அமுதா(50) என்ற மனைவியும், ராஜதுரை(30) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். குடும்ப பிரச்னை காரணமாக தம்பதியர் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். ஏற்கனவே மகளுக்கு திருமணமாகி விட்ட நிலையில், மகன் ராஜதுரையுடன் குள்ளஞ்சாவடியில் அமுதா வசித்து வந்தார். தாயின் ஏற்பாட்டின் பேரில் மகனுக்கு 3 நாட்களுக்கு முன்பு திருமணம் நடந்துள்ளது. இதையடுத்து குறிஞ்சிப்பாடியில் உள்ள பெண் வீட்டில் கறிவிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விருந்தில் அண்ணாதுரை, அவரது குடும்பத்தினரும் பங்கேற்றனர். விருந்து முடிந்த நிலையில் நேற்று தனது மாமியாரை (அண்ணாதுரையின் தாயார்) குள்ளஞ்சாவடியில் இருந்து நெல்லிக்கொல்லையில் உள்ள தனது கணவரின் வீட்டில் விடுவதற்காக அமுதா ஒரு ஆட்டோவில் அழைத்து சென்றுள்ளார்.



இதனிடையே வீட்டின் பின்புறம் உள்ள குப்பைமேட்டில் அமுதா கொலை செய்யப்பட்டு இறந்து கிடந்தார். தகவலறிந்த சேத்தியாத்தோப்பு போலீசார் அமுதாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தினர். முதல்கட்ட விசாரணையில் அமுதாவை, அவரது கணவர் கொலை செய்தது தெரிய வந்தது. இந்நிலையில், வளையமாதேவி டாஸ்மாக் கடை அருகே பதுங்கியிருந்த அண்ணாதுரையை கைது செய்தனர். மேலும் கொலைக்கான காரணம் குறித்து அவர் வாக்குமூலம் அளித்துள்ளார். அதுபற்றிய விவரம் வருமாறு: அமுதா ஏற்பாட்டின்பேரில் மகன் ராஜதுரைக்கு திருமணம் நடந்து, நேற்று முன்தினம் அங்கு கறி விருந்து நடந்துள்ளது. இதில் கலந்து கொண்ட அண்ணாதுரையை மனைவி உள்பட யாரும் மதிக்காததால் கடுமையான ஆத்திரத்தில் இருந்துள்ளார்.

இந்த விருந்தில் கலந்து கொண்ட தனது மாமியாரை கணவர் வீட்டில் விட நெல்லிக்கொல்லைக்கு அமுதா ஆட்டோவில் அழைத்து வந்துள்ளார். அப்போது, கணவன், மனைவி இடையே மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டதால் ஆத்திரம் அடைந்த அண்ணாதுரை ஆசாரி வேலைக்கு பயன்படுத்தும் கூர்மையான ஆயுதத்தால் (உளி) மனைவி அமுதாவின் கை, கால், முகத்தில் சரமாரியாக குத்தி உள்ளார். அமுதா அலறி துடித்ததால் பயந்துபோன ஆட்டோ டிரைவர் அங்கிருந்து ஆட்டோவில் வேகமாக தப்பிச்சென்று விட்டார். இதற்கிடையே மனைவி ரத்த வெள்ளத்தில் சாய்ந்ததும் அண்ணாதுரை தலைமறைவாகி விட்டார். ஆனால் வளையமாதேவியில் அவரை போலீசார் பிடித்து விட்டனர்.

இதையடுத்து கொலை வழக்குப்பதிவு செய்த போலீசார், கொலைக்கு பயன்படுத்திய ஆயுதத்தை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை சிதம்பரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

## கடலூரில் பாலியல் பலாத்காரம் செய்து 3 வயது சிறுமி அடித்துக்கொலை: வெறிச்செயலில் ஈடுபட்ட தாய் மாமன் கைது



மூன்று வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து அடித்துக்கொன்ற தாய் மாமன் மற்றும் தாயை தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே ஒரு கிராமத்தைச் சேர்ந்த கூலி தொழிலாளிக்கு 35 வயது மனைவியும், 2 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர். தொழிலாளிக்கு இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் மூத்த மகன் மட்டும் அவருடன் இருந்துள்ளார். மற்ற 3 குழந்தைகளையும், மனைவியின் சித்தப்பா மகனான ஜீவா (25) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் உள்ள தனது வீட்டில் தங்க வைத்துள்ளார். இந்நிலையில் கடந்த 17ம் தேதி நள்ளிரவு ஜீவா, சகோதரி கணவரின் உறவினர்களை தொடர்பு கொண்டு, 3 வயது சிறுமி இறந்து விட்டதாகவும், தாயுடன் பஸ்சில் அனுப்பி வைப்பதாகவும் கூறியுள்ளார். இதையடுத்து கடலூர் உழவர்சந்தை அருகே இறந்த சிறுமி மற்றும் 2 குழந்தைகளுடன் இருந்த பெண்ணை உறவினர்கள் கண்டுபிடித்தனர்.

இறந்த சிறுமியின் உடலில் காயங்கள் இருந்ததால், கடலூர் புதுநகர் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். போலீசார் சடலத்தை கைப்பற்றி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். மகள் சாவில் சந்தேகம் இருப்பதாக தந்தை அளித்த புகாரின்படி போலீசார் வழக்குப்பதிந்து தனிப்படை அமைத்து விசாரித்தனர். இந்நிலையில் சிறுமியின் பிரேத பரிசோதனை அறிக்கையில், பாலியல் பலாத்காரம் செய்து கொடூரமாக அடித்து கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து தனிப்படை போலீசார் திருவண்ணாமலையில் பதுங்கி இருந்த ஜீவாவை நேற்று கைது செய்து கடலூருக்கு அழைத்து வந்தனர். வழியில் இயற்கை உபாதை கழிக்கப்போவதாக கூறியதாக சென்ற ஜீவா, திடீரென பாலத்தில் இருந்து குதித்து தப்ப முயன்றதில் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவரை கடலூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

விசாரணையில் சிறுமியின் தாய், அவரது சித்தப்பா மகனுடன் தகாத உறவில் இருந்ததும், சிறுமியை ஜீவா பாலியல் பலாத்காரம் செய்து அடித்து கொடூரமாக கொலை செய்ததும் தெரிய வந்தது. இதையடுத்து சிறுமியின் பாலியல் கொடூர கொலையை மூடி மறைக்க உடந்தையாக இருந்ததாக தாயையும் போலீசார் கைது செய்தனர். மீட்கப்பட்ட மற்ற 2 குழந்தைகளும் கணவரின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். பாலியல் தொந்தரவு செய்து 3 வயது சிறுமி அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் கடலூரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## குடும்பப் பிரச்சினை காரணமாக மனைவி, 2 குழந்தைகளை வெட்டிக் கொன்ற கணவன்



அருப்புக்கோட்டை அருகே குடும்பப் பிரச்சினை காரணமாக மனைவி மற்றும் 2 குழந்தைகளை வெட்டிக் கொன்றுவிட்டு கணவர் சுந்தரவேலு காவல்நிலையத்தில் சரணடைந்தார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே உள்ள திருவிருந்தாள்புரம் கிராமத்தை சேர்ந்தவர் சுந்தரவேலுவுக்கு பூங்கொடி என்ற மனைவியும், ஜெயதுர்கா(10), ஜெயலெட்சுமி (7) என 2 குழந்தைகளும் உள்ளனர்.

இந்நிலையில் இன்று காலை குடும்ப பிரச்சினை காரணமாக சுந்தரவேலு தனது மனைவி மற்றும் 2 பெண் குழந்தைகளை அரிவாளால் சரமாரியாக வெட்டிக் கொன்றார். இதையடுத்து அவர் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு சென்று, தன்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளை வெட்டிக்கொலை செய்துவிட்டதாக கூறி சரணடைந்தார்.

இதனை கேட்டு அதிர்ந்த போலீசார், சம்பவ இடத்துக்கு சென்று பார்த்தபோது சுந்தரவேலுவின் மனைவி மற்றும் 2 குழந்தைகளும் வீட்டில் பிணமாக கிடந்தனர்.

பின்னர் கொலை செய்யப்பட்ட 3 பேரின் உடல்களையும் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இந்த சம்பவம் குறித்து மாவட்ட எஸ்பி கண்ணன் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினார். குடும்ப பிரச்சினை காரணமாக தனது மனைவியையும், தனது குழந்தைகளையும் வெட்டிக்கொன்ற கொடூர சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கொலை குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கோபி அருகே சூதாட்டத்தில் ஈடுபட்ட 16 பேர் கைது





கோபி அருகே மெகா சூதாட்டத்தில் ஈடுபட்ட மாஜி எஸ்ஐ உட்பட 16 பேர் கைது செய்யப்பட்டனர். சூதாட்ட கும்பலிடம் இருந்து ரூ.4.12 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஈரோடு மாவட்டம் கோபி அருகே பெரியகொடிவேரியில் தனியார் தங்கும் விடுதி செயல்பட்டு வருகிறது.

இங்கு சூதாட்டம் நடைபெறுவதாக பங்களாபுதூர் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதைத்தொடர்ந்து எஸ்ஐ பரமேஷ்வரன் மற்றும் போலீசார் நேற்று முன்தினம் இரவு விடுதியை கண்காணித்தனர். அப்போது உள்ளே சூதாட்டம் நடைபெறுவது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து சூதாட்ட கும்பல் தப்பியோடாமல் இருக்க தங்கும் விடுதியை போலீசார் சுற்றி வளைத்தனர்.

பின்னர் அங்கு சூதாட்டத்தில் ஈடுபட்ட டி.என்.பாளையத்தை சேர்ந்த சவுந்திரராஜன் (31), கலிங்கியம் சின்னக்குளத்தைச் சேர்ந்தசேகர் (43), பகுத்தம்பாளையத்தை சேர்ந்த பிரபாகர் (36), கோவை மாவட்டம் அன்னூர் அருகே உள்ள செல்லனூரை சேர்ந்த சின்னசாமி (40), செரையாம்பாளையத்தை சேர்ந்த நடராஜ் (50), நீலாம்பூரைச் சேர்ந்த தினேஷ் (32), மூனுகாட்டியூரை சேர்ந்த ரகுநாதன் (40), பவானி லஷ்மி நகரை சேர்ந்த பாலசுப்பிரமணியம் (64), டி.என்.பாளையம் நேரு விதியை சேர்ந்த விக்னேஷ் (32), கார்த்தி (30), சத்தியமங்கலம் அண்ணா நகரை சேர்ந்த அப்துல் பஷீர் (38), பெருந்துறை மேக்கூரை சேர்ந்த ஈஸ்வரமூர்த்தி (58), அய்யம்பாளையத்தை சேர்ந்த ராயப்பன் (43), மேட்டுப்பாளையம் நடுரை சேர்ந்த பார்த்தசாரதி (50), ஓடத்துறையைச் சேர்ந்த விஜயகுமார் (67), பெருந்துறை தோப்புபாளையத்தை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி (60) ஆகியோரை கைது செய்தனர்.

இக்கும்பலிடமிருந்து ரூ.4,12,530 ரொக்கம், 3 கார்கள், 2 இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்யப்பட்டன.இதில் கைது செய்யப்பட்ட கிருஷ்ணமூர்த்தி பெருந்துறை ஹைவே பேட்ரோல் எஸ்ஐயாக பணியாற்றி கடந்த ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார்.

அதன்பிறகு தனியார் விடுதியில் மேலாளராக பணியாற்றியது விசாரணையில் தெரியவந்தது. ஓய்வுபெற்ற போலீஸ் எஸ்ஐ உள்பட 16 பேர் சூதாட்டத்தில் கைதான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## மாணவர்களை மூளைச்சலவை செய்து ஐஎஸ்ஐஎஸ் அமைப்புக்கு ஆள்சேர்ப்பு: கோவை அரபிக்கல்லூரி முதல்வர், ஊழியர் கைது





மாணவர்களை மூளைச்சலவை செய்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு ஆள் சேர்ப்பு முயற்சியில் ஈடுபட்டதாக கோவை அரபிக் கல்லூரி முதல்வர் மற்றும் ஊழியரை என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்தனர். கோவை உக்கடம் கோட்டை ஈஸ்வரன் கோயில் முன்பு கடந்த கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ம் தேதி காரில் சிலிண்டர் வெடித்தது. இதில் காரை ஓட்டி வந்த ஜமேஷா முபின் (28) என்பவர் பலியானார். சம்பவ இடத்தில் போலீஸ் உயர் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அதில், காரில் பால்ரஸ் குண்டு, ஆணி ஆகியன இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

உக்கடம் போலீசார் விசாரித்தனர். பின்னர் இந்த வழக்கு என்ஐஏ அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. தீவிர விசாரணையில், வழிபாட்டு தலங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வெடிகுண்டு வைக்க சதி திட்டம் தீட்டியது தெரியவந்தது. ஜமேஷா முபின் வீட்டில் சோதனையிட்டதில் அங்கு கிலோ கணக்கில் வெடிபொருட்கள் இருந்தது. அதனை போலீசார் பறிமுதல் செய்தனர். இந்த வழக்கில் என்ஐஏ அதிகாரிகள் ஜமேஷா முபின் கூட்டாளிகள், உடந்தையாக இருந்தவர்கள் என மொத்தம் 17 பேரை கைது செய்துள்ளனர். இந்த வழக்கு சென்னை பூந்தமல்லியில் உள்ள என்ஐஏ சிறப்பு கோர்ட்டில் நடந்து வருகிறது. இதற்கிடையே என்ஐஏ அதிகாரிகள் கோவை குனியமுத்தூர் பகுதியில் உள்ள தனியார் அரபி கல்லூரியில் கடந்த 2023ம் ஆண்டு சோதனை நடத்தினர். அதில், அந்த கல்லூரியில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு ஆதரவு தொடர்பான ஆவணங்கள், மாணவர்களை மூளைச்சலவை செய்து ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பில் சேர வைக்க முயன்றது தெரியவந்தது.

இது தொடர்பாக என்.ஐ.ஏ அதிகாரிகள் கார் வெடிப்பு வழக்கில் இருந்து தனியாக, ஐஎஸ்ஐஎஸ் அமைப்புக்கு ஆள் சேர்த்ததாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். பின்னர் கடந்த ஆண்டு இந்த வழக்கில் தொடர்புடைய 4 பேரை கைது செய்தனர். இந்நிலையில் ஐஎஸ் ஐஎஸ் அமைப்புக்கு ஆள் சேர்த்தது தொடர்பாக விசாரணை நடத்த நேற்று என்.ஐ.ஏ. அதிகாரிகள் கோவை வந்தனர். தொடர்ந்து அவர்கள் போத்தனூர் பகுதியைச் சேர்ந்த அகமது அலி (35), உக்கடம் புல்லுக்காடு பகுதியை சேர்ந்த ஜவஹர் சாதிக் (30) ஆகியோரை கோவை பிஆர்எஸ் வளாகத்தில் உள்ள என்.ஐ.ஏ.அலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைத்து சென்றனர்.

அரபு கல்லூரி தொடர்பாகவும், ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு தொடர்பாகவும் பல்வேறு கேள்விகளை இருவரிடமும் கேட்டனர். விசாரணை முடிவில், இருவரையும் என்.ஐ.ஏ அதிகாரிகள் கைது செய்தனர். பின்னர் இருவரும் சென்னை என்ஐஏ கிளை அலுவலகத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். கைது செய்யப்பட்ட அகமது அலி அரபி கல்லூரியின் முதல்வராகவும், ஜவஹர் சாதிக் அங்கு ஊழியராகவும் பணிபுரிந்ததாக என்ஐஏ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் கவனிப்பார்களா? கலைஞர் கைவினை திட்டத்தை செயல்படுத்தாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

அனைத்து மீனவர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் நாஞ்சில் பீ.ரவி வெளியிட்ட பத்திரிக்கை செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது,

மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கலைஞர் கைவினை திட்டத்தின் கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை முன்னேற்றும் நோக்கத்தோடும், புதிய தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடும், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அனைத்து வகையான தொழில்களும் முன்னேற வேண்டும் தமிழ்நாடு நம்பர் ஒன் மாநிலமாக மாற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு பல திட்டங்களும், திட்டத்துக்கான சலுகைகளை அறிவித்தார்கள்.

அந்த திட்டங்களை செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுடைய இணை இயக்குனர் போன்றோர்கள் புதிய தொழில் முனைவோர்களுக்கு வேண்டிய வங்கி கடன் மற்றும் மானியங்களை வழங்கவேண்டும் என்றும் ஆவணங்கள் அனைத்தையும் எளிமையாக்கி, பிணையில்லா கடனையும், ஆண்டுக்கு குறைந்த வட்டி விகிதத்திலும் கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின்



முதலமைச்சர் அவர்களும், மத்திய அரசும் அறிவித்துள்ளது.

ஆனால் எந்த முயற்சியும் எடுக்காமல் கலைஞர் கைவினை திட்டத்தின் கீழ் புதிய தொழில் முனைவராக மாற வேண்டும் என்று செல்லக்கூடியவர்களை அலைக்கழிப்பு செய்யக்கூடிய நிலையில் இன்றைக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்தினுடைய உதவி இயக்குனர் பாலகோபாலன் போன்ற சில அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக கலைஞர் கைவினை திட்டத்தின் மூலம் மீனவர்களுக்கு வலைகள் பின்னும் பயிற்சி அளிக்க வேண்டும் என்று சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக பயிற்சி அளிக்க வேண்டும் எங்கு பயிற்சி அளிக்க வேண்டும், எந்த இடத்தில் பயிற்சி அளிக்க வேண்டும், எப்படி பயிற்சி அளிக்க வேண்டும், யார் மூலம் பயிற்சி அளிக்க வேண்டும் என்று தெரியாமல் இன்றுவரைக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்தின் சில அதிகாரிகள் மீனவ மக்களுக்கு பயிற்சி அளிக்காமலும், சான்றிதழ் வழங்காமலும், மீனவர்களின் விண்ணப்ப மனுக்களை கடந்த 2024 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நிலுவையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கலைஞர் கைவினை திட்டத்தின் மூலம் பயிற்சி கொடுத்திருந்தால் மீனவ மக்களுக்கு மூன்று லட்ச ரூபாய் வங்கி கடன் வழங்கப்பட்டிருக்கும்.

கடந்த 2024 ஆண்டு நவம்பர் மாதம் கொடுக்கப்பட்ட மீனவ மக்களுக்கு கூட இன்றுவரை பயிற்சி அளிக்காமல் அலைக்கழிக்கப்பட்டு அந்த மூன்று லட்ச ரூபாய் வங்கி கடன மற்றும் உதவித்தொகை இன்றுவரைக்கும் கிடைக்காமல், மீனவ மக்கள் ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கிறது.

இதற்கு முக்கிய காரணம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்தின் உதவி இயக்குனர் பாலகோபாலன் என்பவர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



அகமதாபாத் விமான விபத்து மிகவும் வருத்தம் அளிக்கிறது. ஆண்டவன் அருளால், இனி யாருக்கும் இதுபோன்று நடக்கக்கூடாது என்று இறைவனை வேண்டிக் கொள்கிறேன், சென்னை விமான நிலையத்தில் நடிகர் ரஜினிகாந்த் பேட்டி.

## மக்கள் பாதுகாப்பு பேரவை சார்பாக ஆலய நுழைவு போராட்டம்



ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் 17/6/2025 அன்று மக்கள் பாதுகாப்பு பேரவை சார்பாக ஆலய நுழைவு போராட்டம் எதற்காக நடத்தப்பட்டது என்றால் உள்ளூர் மக்கள் சிறப்பு வழியில் தரிசனத்திற்கு செல்லஅனுமதி இல்லை. கோவில் தரிசனம் என்பது ஆண்டாண்டு காலமாக உள்ளூர் மக்கள் சிறப்பு வழியில் தான் சென்று கொண்டிருந்தனர். இதனை தடுத்து நிறுத்தி இருநூறு ரூபாய் வரிசையில் வரும் படி கோவில் நிர்வாகம் கட்டளையிட்டது. இந்த முறை உள்ளூர் மக்கள் யாருக்கும் பிடிக்கவில்லை. மேலும் இன்று போராட்டம் நடத்த விடாமல் காவல்துறையினர் கைது செய்தனர். மக்கள் பாதுகாப்பு பேரவை என்பது எந்த கட்சியும் சார்ந்ததல்ல என்று தெரிவித்தனர்.

## காஞ்சிபுரம் மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்து முன்னாள் அமைச்சர் வைகைசெல்வன் தலைமையில் ஆர்ப்பாட்டம்



காஞ்சிபுரம் மாநகராட்சியில் நடைபெறும் நிர்வாக சீர்கேடு கண்டித்தும் மக்கள் விரோத திமுக ஸ்டாலின் அரசு கண்டித்து காஞ்சிபுரம் மாவட்ட அதிமுக சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே காவலன் கேட் பகுதியில் முன்னாள் அமைச்சர் வைகைசெல்வன் மற்றும் சோமசுந்தரம் தலைமையில் கருப்பு உடை அணிந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஆர்பாட்டத்தில் 300க்கும் மேற்பட்ட அதிமுகவினர் கலந்து கொண்டு திமுக அரசுக்கு கண்டன கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

- R.G. ஆதிஷ்



சென்னை அடையாறு முகத்துவாரப் பகுதியில் உள்ள சீனிவாசபுரம் பழைய குடியிருப்புகளை அகற்றி புதிய குடியிருப்பு கட்டுவது தொடர்பாக அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

- R.G. ஆதிஷ்

## கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே சாலையில் இருசக்கர வாகனத்தில் ஹெல்மெட், காரில் சீட் பெல்ட் அணிந்து வந்த வாகன ஓட்டிகளுக்கு சர்ப்ரைஸ் கொடுத்த போலீஸ் அதிகாரி!



போக்குவரத்து விதிமுறையை விதிமுறைகளை கடைப்பிடித்ததிற்கு பாராட்டி, கொய்யாப்பழம் இலவசமாக வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்திய போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் சுரேஷ், பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு விதமாக விபத்துகள் ஏற்படாதவாறு போக்குவரத்து சாலை விதிமுறைகளை கடைப்பிடிப்பது அவசியம் குறித்து எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் சுரேஷ் அவர்கள்.

- R.G. ஆதிஷ்


## திருச்செந்தூர் முருகன் கோயில் குடமுழுக்கு விழாவில் தமிழில் வேத மந்திரங்கள் ஓதப்படும்: கோயில் நிர்வாகம் அறிவிப்பு!!



திருச்செந்தூர் முருகன் கோயில் குடமுழுக்கு விழாவில் தமிழில் வேத மந்திரங்கள் ஓதப்படும் என கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக திருச்செந்தூர் கோயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலில், வருகின்ற 07.07.2025 அன்று காலை 6.15 மணிக்கு மேல் 6.50 மணிக்குள் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற உள்ளது. நன்னீராட்டு பெருவிழாவிற்கு 8000 சதுர அடி பரப்பளவில், 76 குண்டங்களுடன் பிரம்மாண்டமான வேள்விச்சாலை அமைக்கப் பட்டு வருகிறது.

வேள்விச்சாலை வழிபாடு நாட்களில், வேதபாராயணம் திருமுறை விண்ணப்பம் மற்றும் நாதசுவர இன்னிசை நடைபெறும். மேலும், காலை 07.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை மற்றும் மாலை 04.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை, 64 ஓதுவார் மூர்த்திகளைக் கொண்டு, பக்கவாத்தியங்களுடன் பன்னிரு திருமுறைகள், திருப்புகழ் மற்றும் கந்தர் அனுபூதி முதலான செந்தமிழ் வேதங்கள் முற்றோதுதல் நடைபெறும் என கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயிலில் அறநிலையத்துறை அதிகாரிகள் அலட்சியப்போக்கு!




21-06-2025 அன்று ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயிலில் அதிகாரிகளின் அலட்சியப் போக்கு. பக்தர்கள் தீர்த்த வரிசையில் நீராட வரும் பொழுது வரிசையின் நடுவே தேனியைச் சேர்ந்த இரண்டு வயது கைக்குழந்தையுடன் வந்த பெண் முகிலா என்பவர் மயங்கி விழுந்தார். அதிகாரிகளிடம் கேட்டபொழுது , உங்களுக்கு என்ன நாங்க பாத்துக்கிறோம். உயிர் போனால் நாங்க பதில் சொல்வோம் என்று அதிகாரி E.O., முத்துச்சாமி, பேஸ் கார்- கமலநாதன் ஆகியோர் பதில் நாங்கள் கூறுகிறோம் என்று அலட்சியமாக கூறுகிறார்கள். அதிகாரிகளை இயக்கும் எஸ்.ஓ., ஜெயராமன் துணையுடன் செயல்படுகின்றனர். இவர்கள் மீது அறநிலையத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு சமூக ஆர்வலர்கள் புகார் அளிக்கின்றனர். எப்பொழுதும் வார இறுதி நாட்களில் பக்தர்களின் கூட்டம் அதிகம் வரும் காரணத்தினால் கூடுதல் டிக்கெட் கவுண்டர் திறக்கப்பட்டு கொண்டிருந்தன. இப்பொழுது அது நடைமுறையில் இல்லாத காரணத்தினால் பக்தர்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். ஆகையால் வார இறுதி நாட்களில் கூடுதல் டிக்கெட் கவுண்டர் திறக்கப்படும் வேண்டும் என்பது பக்தர்களின் கோரிக்கையாக உள்ளது.

## மூதாட்டியிடம் தங்கச்சங்கிலி வழிப்பறி; 2 பேர் கைது









திருப்பூர் மாவட்டம் தாராபுரம் உட்கோட்டம் மூலனூர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பாறைபட்டி பகுதியில் கடந்த 02.03.2025ஆம் தேதி செல்லாத் தாள் (65) என்ற மூதாட்டியிடம் மளிகைகடையில் வெங்காயம் வாங்குவதாக கூறி ஏமாற்றி கழுத் தில் அணிந்திருந்த தங்கச்சங்கி லியை வழிபறி செய்து சென்றனர்.

இது சம்பந்தமாக மூலனூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 56 / 25 uls 304 (2) BNS வழக்கு பதிவு செய்தும் குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் பொருட்டு திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் உயர்திரு. யாதவ் கிரிஷ் அசோக் IPS அவர்களின் உத்தர வின் பேரில் தாராபுரம் உட் கோட்ட காவல் துணை கண் காணிப்பாளர் திரு. சுரேஷ் குமார் அவர்களின் மேற்பார்வையில் மூலனூர் காவல் ஆய்வாளர் திரு. விவேகானந்தன்அவர்கள் தலை மையில் உட்கோட்ட குற்றப்பிரிவு திரு. பாலமுருகன் (Si) திரு.இளம் வழுதி (SSi) திரு. ரமேஷ் குமார் (HC) திரு. கலைச்செல்வன் (HC) திரு. விக்னேஷ் (PC) ஆகியோர் கள் சம்பவ இடத்திற்கு வந்தும் அருகில் உள்ள 100 CCTV கேம ராக்களை ஆய்வு செய்தும் குற்ற வாளியை கண்டு பிடித்து விசா ரணை செய்ததில் எதிரியான 1)ரதின்@பொறி- 23, த/பெ ராமச்சந்திரன், கள்ளிவேலிப் பட்டி அலங்காநல்லூர், வாடிப் பட்டி, மதுரை என்பவரை 23 -3 - 2025 அன்று கைது செய்து கோவை சிறையில் அடைக்கபட்டார்.

இரண்டாவது எதிரியான மணி என்பவர் மூன்று மாதமாக செல் போன் எதுவும் பயன்படுத்தாமல், வாட்ஸ் அப் கால் மற்றும் instagram call. மட்டுமே பயன் படுத்தி வந்த நிலையில் எதிரியை 19.06.25 அன்று கைது செய்து 2)மணி @ மணிகண்டன் (23) த/பெ பிச்சை பாண்டி, கிழக்கு தெரு, செம்பு குடிப்பட்டி, தனிச்சியம், வாடிப்பட்டி, மதுரை, செல்: 8122522349, 7305422349.

தான் செய்த குற்றத்தினை ஒப் புக்கொண்டு வழிப்பறிக்கு பயன் படுத்திய வண்டியினை பறிமுதல் செய்து உரிய சட்ட விதிமுறை களை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது.

மேற்படி எதிரிக்கு பழனி Town PS -ல் 3)கீரனூர் PS, 4)நிலக் கோட்டை PS ஆகிய காவல் நிலை யங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இவர்கள் 1.3.2025 ம் தேதி பெண்ணிடம் திருச்சியில் வழிபறி வழக்கை ஒப்பு கொண்டுள்ளார் கள்.

எதிரியை பிடிக்க உதவிய திருப்பூர் மாவட்ட Cyber Cell தலைமை காவலர்கள் திரு. பாலுச் சாமி திரு. சந்தானம் அவர்களுக் கும், பவானி குற்றப்பிரிவு தலைமை காவலர் தியாகராஜன் அவர்களுக்கும் HC கார்த்திக், HC மதியழகன், HC ராமர் உள்பட அனைத்து அதிகாரிகளும் குற்ற வாளி பிடிப்பதற்கு உறுதுணை யாக இருந்தனர்.

- நிருபர் ஆனந்தகுமார்

## போலி ஆதார் அட்டை மூலம் வேலை: வங்கதேசத்தைச் சேர்ந்த 26 பேர் கைது!



கடந்த 20.06.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடம், அவினாசி ஆகிய பகுதிகளில் பனியன் தொழிற்சாலைகள் அதிக அளவில் உள்ளன. இதில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் வெளிமாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் வங்கதேசத்தை சேர்ந்தவர்கள் போலி ஆதார் அட்டைகள் மூலம் இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக புகுந்து, திருப்பூர் பனியன் நிறுவனங்களில் பணியாற்றி வருவதாக உளவுப் பிரிவு போலிசாருக்கு தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து பல்லடம் அருகே பிரதான சாலையில் உள்ள ஒரு நிறுவனத்தில் போலீசார் சோதனை நடத்தினர். அப்போது வங்கதேசத்தை சேர்ந்த 26 பேர் போலி ஆவணங்களை தயாரித்து, நிறுவனத்தில் வேலை பெற்று பணியாற்றி வருவது தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் அவர்களை கைது செய்து பல்லடம் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர். மேலும் இதுபோல் பலர் கைது செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

- திருப்பூர் மாவட்ட நிருபர் எஸ்.சக்திவேல்

தமிழ் & ஆங்கிலம்
டைப்பிங் விரைவாக
அடித்து தரப்படும். தினசரி,
வார, மாத பத்திரிகைகள்,
புக் ஒர்க் செய்து
தரப்படும்.
தொடர்புக்கு :
பா. முரளி
9884214688,
7358422989

தமிழ் & ஆங்கிலம்
டைப்பிங் விரைவாக
அடித்து தரப்படும்.
அனைத்து விதமான கலர்
டிசைன்கள், டிடிபி
வேலைகள் செய்து
தரப்படும்
தொடர்புக்கு
பா. முரளி
9884214688, 7358422989

## ரேஷன் கடைகளில் புதிய நடைமுறையால் நீண்ட நேரம் காத்திருப்பு




ரேஷன் கடைகளில் கைரேகை இயந்திரத் துடன் எலக்ட்ரானிக் தராசை இணைத்துள்ளதால், பயனாளிகள் பொருள் வாங்க நீண்ட நேரம் காத்திருக்கின்றனர்.

வடசென்னையில் கடந்த மாதம் முதல், அனைத்து ரேஷன் கடைகளிலும் கைரேகை இயந்திரத்துடன், எலக்ட்ரானிக் தராசை இணைத்துள்ளனர். இதன் மூலம், ஒருவருக்கு, 20 கிலோ அரிசியை இயந்திரத்தில் பதிவு செய்தால், அதை எடை போட்டு பயனாளிக்கு வழங்கினால் தான் அடுத்து, சர்க்கரை வழங்க பதிவு செய்ய முடியும். இந்த புதிய நடைமுறையால், ஒரு கார்டுதாரருக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை, பருப்பு ஆகியவற்றை வழங்க, 10 முதல், 15 நிமிடம் ஆகிறது. இதனால் ஒரு நாளைக்கு, 50 கார்டுதாரர்களுக்கு மட்டுமே ரேஷன் பொருட்களை வழங்க முடிகிறது. ரேஷன் பொருள் வாங்க, 10 பேர் வரிசையில் நின்றால், 10வது நபர் ரேஷன் பொருள் வாங்க இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக காத்திருக்க வேண்டி உள்ளதால், மிகவும் சிரமப்படுகின்றனர். இன்டர்நெட் இணைப்பு சரியாக கிடைக்காத நேரத்தில், ஒருவர் ரேஷன் பொருள் வாங்க, இன்னும் நேரம் கூடும். அதுவரையும் காத்திருக்கின்றனர். இடையிடையே கடை ஊழியர்கள் வெளியே சென்று விடுவதால் ரேஷன் பொருட்கள் வழங்குவதில் இன்னும் தாமதம் ஏற்படுகிறது. இதனை சரிசெய்ய வேண்டி பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என பொறுத்திருந்து பார்ப்போம்.





தமிழக வெற்றிக் கழகத் தலை வரும் வருங்கால முதல்வருமான தமிழ் நாட்டின் தங்க மகன் தளபதி விஜய் அவர்களின் பிறந்த நாளை யொட்டி(22/06/2025) கழக பொதுச் செயலாளர் N.ஆனந்த் அவர்களின் அறிவுறுத்தலின் படி, வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் திரு G. சுறா. வேலு அவர்களின் தலைமையில், வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் S.மாதேஷ்வரன் முன்னிலையில் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஏற்பாட்டில் மு.அருண்குமார், ம.புகழேந்தி, செ.திவ்யா, ச.ரவி, கா.மகேஷ், ப.பாஸ்கர், நா.ஜெயக்குமார், நா.ராகவேந்திரா, செ.ஜானகி ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சி நிரல்: முதலாவதாக G.சுறா வேலு அவர்களின் தலைமையில் T.H. ரோட்டில் அமைந்துள்ள சித்தி விநாயகர் கோயிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது. இரண்டாவதாக T.H. ரோட்டின் பொது இடத்தில் அன்னதானம் மற்றும் 150 லிட்டர் பழச்சாறுகள் வழங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது.மூன்றாவதாக R.K.நகர் பகுதியில் சாலையில் வசிக்கும் ஆதரவற்றோர்களுக்கு சுமார் 100 பேருக்கும் அதிகமாக உணவும் வழங்கப்பட்டது.





## நிலக்கோட்டை பகுதியில் கஞ்சா விற்பனை செய்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பெண்கள் கைது: 1.300 கிலோ கஞ்சா பறிமுதல்



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை DSP.செந்தில்குமார் உத்தரவின் பேரில் நிலக்கோட்டை இன்ஸ்பெக்டர் சத்திய பிரபா தலைமையில் சார்பு ஆய்வாளர் அபினேஷ் மற்றும் காவலர்கள் தீவிர ரோந்து மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது சிலுக்குவார்பட்டி தெற்கு தெரு பகுதியில் வீட்டில் வைத்து கஞ்சா விற்பனை செய்த தாய் பாண்டியம்மாள்(50), மகள்கள் மல்லிகா(31), பிரியா(27) ஆகிய 3 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து ஒரு கிலோ 300 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

- R.G. ஆதிஷ்

## தாய்லாந்துக்கு சுற்றுலா அழைத்து செல்வதாக கூறி முதியவரிடம் ரூ.5.82 லட்சம் மோசடி செய்த வாலிபர் கைது



தாய்லாந்து நாட்டுக்கு சுற்றுலா செல்ல பேக்கேஜ் ஏற்பாடு செய்து தருவதாக கூறி 5 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் பணம் மோசடி செய்த வாலிபரை போலீசார் கைது செய்தனர்.கடலூர் மாவட்டம் நெய்வேலியை சேர்ந்த பரமசிவம் (70). இவர் தனது நண்பர்களுடன் தாய்லாந்து நாட்டிற்கு சுற்றுலா செல்ல முடிவு செய்தார்.

இதற்காக முகநூலில் வந்த ஒரு தனியார் நிறுவனத்தின் விளம்பரத்தை பார்த்து அதிலிருந்த செல்போன் எண்ணை தொடர்பு கொண்டார். அப்போது அதில் திருப்பூர் மாவட்டம் மடத்துபுரம் பகுதியை சேர்ந்த சண்முகம் மகன் ஹரிஹரசுதன் (36) என்பவர் பேசியுள்ளார். அப்போது அவரிடம் பரமசிவம் தனக்கும் தனது நண்பர்கள் 18 பேருக்கும் தாய்லாந்து சுற்றுலா செல்வதற்கு பேக்கேஜ் தயார் செய்து தரும்படி கேட்டுள்ளார்.

இதை கேட்ட ஹரிஹரசுதன் பரமசிவம் மற்றும் அவரது நண்பர்களை தாய்லாந்து நாட்டிற்கு சுற்றுலா அழைத்து செல்வதாக கூறியுள்ளார். இதற்காக பரமசிவத்திடம் தனது வங்கி கணக்கு மூலம் ரூ.5 லட்சத்து 82 ஆயிரம் பணம் பெற்றுள்ளார். ஆனால், ஹரிஹரசுதன் அவர் கூறியபடி சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லவில்லை. மேலும் பணத்தையும் திரும்ப தராமல் ஏமாற்றி வந்துள்ளார்.

இதுகுறித்து பரமசிவம் கடலூர் மாவட்ட சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தார்.

புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து, ஹரிஹரசுதனின் செல்போன் எண் மற்றும் வங்கி கணக்கு எண்களின் விபரங்களை கொண்டு அவர் தலைமறைவாக இருந்த கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சிக்கு சென்று அவரை கைது செய்தனர்.

ஹரிஹரசுதன் மீது மதுரை மற்றும் சென்னை செயின்ட் தாமஸ் மவுண்ட் சைபர் கிரைம் காவல் நிலையங்களில் வெளிநாட்டு சுற்றுலா பேக்கேஜ் வசதி செய்து கொடுப்பதாக கூறி பணம் பெற்றுக்கொண்டு ஏமாற்றியதாக வழக்குகள் பதிவாகியிருப்பது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து போலீசார் ஹரிஹரசுதனை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

## தென்காசியில் பதுக்கி வைத்திருந்த பயங்கர ஆயுதங்கள் பறிமுதல்: மானாமதுரையில் 4 வாலிபர்கள் கைது



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் நள்ளிரவில் பயங்கர ஆயுதங்களுடன் சிலர் சுற்றித்திரிவதாக நகர் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து தனிப்படை அமைத்து ரோந்து பணியில் ஈடுபட்டு வந்தனர். மானாமதுரை அருகே கிருங்காகோட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கண்காணிப்பில் ஈடுபட்டபோது பஸ் ஸ்டாப் அருகே சந்தேகத்திற்கு இடமான வகையில் வாளுடன் நின்றிருந்த ராஜகம்பீரத்தை சேர்ந்த முகமது பாரிஸ் (19), தினேஷ் (20), சிவகங்கை மேலவாணியங்குடியை சேர்ந்த பாலமுருகன் (19) ஆகியோரை கைது செய்தனர். இதில் முகமது பாரிஸ் மதுரையில் உள்ள கல்லூரியில் படித்து வருகிறார். இதுசம்பந்தமாக ராஜகம்பீரத்தை ஆகாஷ் (19) என்பவரை நேற்று கைது செய்து நடத்திய விசாரணையில், தென்காசியில் இருந்து ஆயுதங்களை வாங்கியதாக தெரிவித்தார்.

இதையடுத்து தனிப்படையினர் தென்காசிக்கு விரைந்தனர். அங்கு, குற்றாலம், வாவா நகரை சேர்ந்த அருணாச்சலம் என்பவரை கைது செய்து வீச்சரிவாள், வாள்கள், பட்டா கத்திகள் என 26 ஆயுதங்களை பறிமுதல் செய்தனர். கைதானவர்களிடம் நடத்திய விசாரணையில் வழிப்பறிக்காக ஆயுதங்களுடன் சுற்றித்திரிந்ததாக தெரிவித்துள்ளனர். இருப்பினும் அவர்களிடம் தனிப்படை போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தில் விரைந்து செயல்பட்ட தனிப்படையினருக்கு சிவகங்கை மாவட்ட எஸ்பி ஆஷிஜ் ராவத் பாராட்டு தெரிவித்தார்.

## குழித்துறை அருகே பஸ்சுக்காக காத்திருந்த 2 குழந்தைகளின் தாயை காரில் கடத்தி சென்று பலாத்காரம்: பள்ளி நண்பர் வெறிச்செயல்; தட்டிக் கேட்டதால் சரமாரி தாக்குதல்



கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை அருகே பஸ்சுக்காக காத்திருந்த 2 குழந்தைகளின் தாயை காரில் கடத்தி சென்று பலாத்காரம் செய்த பள்ளி நண்பர் மீது போலீசில் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனை தட்டிக் கேட்ட பெண்ணை சரமாரி தாக்கியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் மஞ்சாலுமூடு பகுதியை சேர்ந்தவர் ரேவதி (36 பெயர் மாற்றம்). பிளஸ் 2 வரை படித்துள்ளார். அதே பகுதியில் உள்ள ஒரு துணிக் கடையில் வேலைபார்த்து வருகிறார். அவருக்கு திருமணமாகி கணவர், 2 பிள்ளைகள் உள்ளனர். அவரது வீட்டின் அருகே வசித்து வருபவர் ராபர்ட் ஜான் (36 பெயர் மாற்றம்). அவருக்கு திருமணமாகி மனைவி, பிள்ளைகள் உள்ளனர். ராபர்ட் ஜானும், ரேவதியும் பள்ளிக்கூடத்தில் ஒன்றாக படித்த போது நட்புடன் பழகியுள்ளனர். இந்த பழக்கம் திருமணமான பிறகும் தொடர்ந்தது.

இந்தநிலையில் ரேவதி கடந்த ஏப்ரல் மாதம் 12ம் தேதி மதுரையில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு சென்று விட்டு சொந்த ஊருக்கு திரும்பி வந்து கொண்டிருந்தார். இரவு சுமார் 9.30 மணியளவில் குழித்துறை ஜங்சன் பகுதிக்கு வந்திறங்கினார். பின்னர் தனது வீட்டுக்கு செல்வதற்காக குழித்துறை பஸ் நிறுத்தத்தில் பஸ்சுக்காக காத்துக்கொண்டிருந்தார். அப்போது ராபர்ட் ஜான் தனக்கு சொந்தமான காரில் அந்த வழியாக வந்தார். பஸ் நிறுத்தத்தில் ரேவதி நிற்பதை பார்த்த உடனே காரை ஓரமாக நிறுத்தினார். தொடர்ந்து உன்னை வீட்டில் விடுகிறேன் என்று கூறினார். இதை நம்பிய ரேவதி நண்பன் தானே கூப்பிடுகிறான் என்று நினைத்து காரில் ஏறியுள்ளார். சிறிது தூரம் சென்றவுடன் ரேவதி வீட்டுக்கு செல்லும் வழியை தவிர்த்து, ராபர்ட் ஜான் தனது வீட்டுக்கு செல்லும் வழியில் காரை ஓட்டி சென்றார். இதனால் எரிச்சலடைந்த ரேவதி, டேய் எனக்கு நேரமாகிவிட்டது

எனது வீட்டுக்கு அழைத்து செல்லாமல் எங்கே காரை ஓட்டி செல்கிறாய்? என கேட்டார். அப்போது பேசிய ராபர்ட் ஜான், இவ்வளவு தூரம் வந்துட்ட என் வீட்டுக்கு வா எனது மனைவி, பிள்ளைகளை பார்த்துவிட்டு உன்னை உனது வீட்டில் கொண்டு போய் விடுகிறேன் என்றார். இதனை நம்பிய ரேவதி சம்மதித்தார். இதையடுத்து ராபர்ட் ஜான் வீடு வந்துவிட்டதால் காரில் இருந்து இருவரும் இறங்கினர். அவசர அவசரமாக ரேவதியை அழைத்து சென்ற ராபர்ட் ஜான், கதவை திறந்து சட்டென ரேவதியின் கையை பிடித்து இழுத்து வீட்டின் உள்ளே தள்ளினார். இதை சற்றும் எதிர்பாராத ரேவதி அதிர்ச்சியில் உறைந்தார். எதற்காக இப்படி தள்ளுகிறாய்? உன் மனைவி, பிள்ளைகள் எங்கே என கேட்டார்.

இங்கே யாருமில்லை என்னிடம் வசமாக மாட்டிக் கொண்டாய் என சத்தமாக சிரித்த ராபர்ட் ஜான், ரேவதியின் கழுத்தை நெரித்து, வாயை பொத்தி படுக்கையறைக்கு கொண்டு சென்றார்.

அங்கு கட்டிலில் ரேவதியை தள்ளிவிட்டு அவரது ஆடைகளை வெறித்தனமாக கழற்றி எறிந்தார். ரேவதி எவ்வளவோ போராடியும் முடியவில்லை. இதையடுத்து ரேவதியை பலவந்தமாக ராபர்ட் ஜான் பலாத்காரம் செய்தார். கடுமையாக போராடியதால் சோர்வடைந்த ரேவதி இறுதியில் ராபர்ட் ஜானின் இச்சைக்கு இரையானார். இதையடுத்து கதறி அழுத ரேவதியிடம் இதுகுறித்து யாரிடமாவது கூறினால் உன்னையும், உனது பிள்ளைகளையும் கொன்றுவிடுவதாக மிரட்டினார். பின்னர் வலுக்கட்டாயமாக மீண்டும் காரில் ஏற்றி சென்று ரேவதியின் வீடு அருகே இறக்கிவிட்டு சென்றுவிட்டார். இந்த சம்பவத்தால் மன உளைச்சலில் இருந்த ரேவதியால் சரியாக தூங்க முடியவில்லை, யாரிடமும் பேசாமல் இருந்தார். இதுகுறித்து ஒரு தடவை கணவர் கேட்டபோது, நடந்த சம்பவத்தை கூறி கதறி அழுதார். இதனால் அதிர்ச்சியடைந்த கணவர் உடனே இதுகுறித்து ராபர்ட் ஜானின் மனைவியிடம் சொல்லிவிடு என்றார்.

இதன்படி ரேவதி நேற்று முன்தினம் காலையில் ராபர்ட் ஜானின் வீட்டுக்கு சென்றார். அங்கு ராபர்ட் ஜான், அவரது மனைவி, சகோதரி மற்றும் தாயார் இருந்தனர். அவர்களிடம் ரேவதி நடந்த விபரத்தை கூறி கதறினார். ஆனால் இதனை ஏற்க மறுத்த ராபர்ட் ஜானின் சகோதரி திடீரென செருப்பை எடுத்து ரேவதியை அடித்தார். இதையடுத்து ராபர்ட் ஜான் அங்கு வந்து ரேவதியை சரமாரி தாக்கி கீழே தள்ளியதோடு வயிற்றில் மிதித்துள்ளார். இதில் காயமடைந்த ரேவதி அங்கிருந்து அழுதவாறு தப்பி வந்துவிட்டார். இதையடுத்து ரேவதி குழித்துறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். தன்னை தாக்கிய ராபர்ட் ஜான், அவரது அக்கா ஆகியோர் மீது மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ரேவதி புகார் அளித்தார். இதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். பள்ளி நண்பனே இளம்பெண்ணை பலாத்காரம் செய்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

"ULLATCHI TODAY" owner and Published : R. Ravi, No. 35/63, Cheriyan Nagar, 3rd Street, New Washermenpet, Chennai - 600 081. and Printed by him at CHENNAI OFFSET PRINTERS,
No. 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. E-mail: ullatchitoday@yahoo.com, Cell : 9003837900, Editor : R. RAVI